விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 20 செவ்வாய்க்கிழமை (03.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 135

## உலகையே மிரட்டி வந்த பயங்கர தீவிரவாதி

# பின்லேடன் சுட்டுக்கொலை



### இஸ்லாமாபாத் அருகே பதுங்கியிருந்தவரை சுற்றிவளைத்து தாக்கியது அமெரிக்க இராணுவம்



(வாஷிங்டன்)

**தீவிரவாதத்தால் உலகையே மிரட்டிவந்த அல்கெய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பில்லேடனை அமெரிக்க இராணுவம் சுட்டுக் கொன்றது. பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் அருகே ஒரு வீட்டில் பதுங்கியிருந்த அவரை அமெரிக்கப் படையினர் நேற்று முன்தினம் அதிரடித் தாக்குதல் நடத்திக் கொன்றனர். இதை அமெரிக்க அதிபர் ஒபாமா உறுதி செய்துள்ளார்.**

உலகின் அதிபயங்கர தீவிரவாத அமைப்பான அல் கெய்தாவின் தலைவராக இருந்தவர் ஒசாமா பின்லேடன். அரபு நாடுகளில் அமெரிக்காவின் தலையீடு அதிகரித்ததால் அவர்களுக்கு பதிலடிகொடுக்க அல் கெய்தா அமைப்பு முடிவு செய்தது. இதையடுத்து அந்த அமைப்பைசேர்ந்ததீவிரவாதிகள்அமெரிக்காவில் அசம்பாவிதங்களை அரங்கேற்றத்தொடங்கினர்.

இதன் உச்சக்கட்டமாக கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவில் பயங்கரத்தாக்குதலை நடத் தினர்.

பைலட் பயிற்சிபெற்ற தீவிரவாதிகள் ஒரே நேரத்தில் நான்கு அமெரிக்க விமானங்களைக் கடத்தினர். அதில் இரண்டுவிமானங்களை உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் மீது மோதித் தகர்த்தனர்.

இந்தத் தாக்குதலில் வானளாவி நின்ற இரட்டைக் கோபுரம் தரைமட்டமானது. மற்றொரு விமானம் இராணுவ தலைமையகமான பென்டகன் மீது தாக்குதலை நடத்தியது. நான்காவது விமானம் பென்சில்வேனியா பகுதியில் விழுந்து நொருங்கியது.

இரட்டைக் கோபுரம் மற்றும் பென்டகனில் நடத்தப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## பாக்., அமெரிக்காவுக்கு தலிபான் எச்சரிக்கை!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்போவதாக தலிபான் அமைப்பின் பாகிஸ்தான் கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அல் கெய்தா அமைப்பின்தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவர் வீரமரணம் செய்திருந்தால் நாம் அவரின் மரணத்திற்கு பழிவாங்குவதற்காக அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் அரசாங்கங்களின் மீதும் அவர்களின் படைகள் மீதும் தாக்குதல் நடத்துவோம் என்று தலிபான் அமைப்பின் பேச்சாளர் இஷானுல்லா இஷான் அடையாளம் காணப்படாத இடமொன்றிலிருந்து தொலைபேசி மூலம் ஏ.எவ்.பி.செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

இவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## பின்லேடனின் உடல் கடலில் புதைப்பு

(வாஷிங்டன்)

அல் கெய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனின் சடலம் அடக்கம் செய்யப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு வெளியே வீடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க முற்றுகையின் போது ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்தார்.

பின்லேடனின் உடல் இஸ்லாமிய சம்பிரதாயப்படி கையாளப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்லாமிய சம்பிரதாயப்படி 24 மணித்தியாலங்களுக்குள் சடலத்தை அடக்கம் செய்ய வேண்டும். ஆனால் ஒசாமா பின்லேடனின் பூதவுடலை பெற்றுக்கொள்ளக்கூடிய நாடொன்றை கண்டறிவது சிரமமாக இருந்த நிலையில் அப்பூதவுடலை கடலில் புதைக்கத் தீர்மானித்ததாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-5)

**நாளை...**

**உங்கள் வலம்புரியில் தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் பகுதி 1 வெளியாகும்.**

## ஐ.நா. எதிர்ப்புப் பேரணிகளால் கிலி கொண்ட மேற்குலக நாடுகள்

(கொழும்பு)

கொழும்பில் மே நாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஐ.நாவுக்கு எதிரான பேரணிகளின் போது பல நாடுகள் தமது தூதரகங்களினதும், பணியாளர்களினதும் பாதுகாப்புக் குறித்து கவலை கொண்டிருந்ததாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பல மேற்குல நாடுகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசிடம் அழுத்தங்களைப் பிரயோகித்திருப்பதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக கொழும்பிலுள்ள ஐ.நா பணியகம் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்குமாறு அரசிடம் ஐ.நா. வலியுறுத்தியிருந்தது.

வேறுபல நாடுகளும் தமது தூதரங்களின் பாதுகாப்புக் குறித்து கவலை கொண்டிருந்ததுடன் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளன.

மேற்குலக நாடுகளின் தூதரங்கள் பல இரண்டு நாட்களுக்கு முன்னரே தமது பணியாளர்களுக்கும் குடிமக்களுக்கும் இது பற்றிய எச்சரிக்கைகளை விடுத்திருந்த தகவலும் இப்போது தெரிய வந்துள்ளது.

குறிப்பாக அமெரிக்கத் தூதரகம் இது பற்றி எச்சரிக்கையை விடுத்திருந்ததுடன் தமது பணியாளர்களும் குடிமக்களும் அவ்வப்போது இலங்கை நிலைமைகள் தொடர்பான மாற்றங்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஒசாமாவை கொன்றது அமெரிக்கப் படைகள்தான் பாக்.அரசு அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

அல் கெய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின் லேடனைக் கொன்றது அமெரிக்காவின் படைகள்தான் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் தாங்கள் விலகி இருந்த்தாக பாகிஸ்தான் அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபோதாபாத்தில் அமெரிக்க உளவுத் துறை உதவியுடன் அந்நாட்டு சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK Canada and India**
Intake Get Register Now Collecting
the Application Until June 30th 2011
Start the academic on September
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
(Free Financial Sponsor for UK Visa) இதுவரை உத்தரவாதப்
படுத்திய வீஸாக்கள் 40க்கு மேல் கிடைத்துள்ளன.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777

## றொபேட் ஓ பிளேக் இலங்கை வந்தடைந்தார்

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் நேற்றிரவு ஈ கே 652 எமிரேட்ஸ் விமானம் மூலம் இலங்கை வந்தடைந்ததாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்துள்ள நிலையில் றொபேட் ஓ பிளேக்கின் வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கொழும்பு வந்துள்ள இவர், ஜனாதிபதி உட்பட பல அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை அரசு உத்தரவாதப் படுத்திய நிறுவனங்களாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் நம்பிக்கையும் இலகுவாகப் பதிவு செய்து அடைந்து கொள்ள
தொடர்புகளுக்கு:-0729994777

# உலக வங்கியின் நிதியுதவியுடன் 6258 வீடுகள் அமைக்கப்படவுள்ளன

## யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் 6ஆயிரத்து 258 நிரந்தர வீடுகள் அமைக்கவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக் கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி வலம்புரிக்கு கருத்துத் தெரி வித்த போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் பின் யாழ்.குடாநாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை அனைவரும் அறிந்ததே.

இராணுவத்தினரின் கட்டுப்பாட் டில் முன்பு இருந்த பல பகுதிகளில் தற்போது மக்கள் மீள்குடியேறி வரு கின்றமையால் உயர் பாதுகாப்பு வலயங்கள் என அழைக்கப்பட்ட பல பகுதிகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளாக மாற்றப்பட்டுவிட்டன.

எஞ்சியுள்ள பகுதிகளில் மிதிவெடி அகற்றப்பட்டதும் மக்கள் மீள்குடி யேற்றப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்படும் மக்க ளுக்கு முக்கிய தேவையாக வீடுகள் உள்ளன. அவற்றை அமைத்துக் கொடுக்க வேண்டியது அவசியமாக வுள்ளது.

இதற்கென உலகவங்கி, இந் தியா, அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதியுதவி வழங்குவதோடு மக்க ளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு வீடுகளை அமைத்து தரவும் அவை முன்வந்துள்ளன.

உலக வங்கி 6ஆயிரத்துக்கு மேற்பட்ட நிரந்தர வீடுகளை அமைத்து தரவுள்ளதோடு, போரினால் பாதிக் கப்பட்ட பல வீடுகளை புனரமைத் தும் தருவதாக உறுதிய ளித்துள்ளது.

இந்தியா தனது வீட் டுத்திட்டத்தின் கீழ் 5ஆயி ரத்து 250 வீடுகளை அமைத்துத் தருவதாக வும், அரச சார்பற்ற நிறு வனங்களான நேப் 2 ஆயிரத்து 377 வீடுக ளையும், கரிதாஸ் கியூ டெக் 247, போரூட் 9 வீடுகளையும், முஸ்லிம் பவுண்டேசன் 10 வீடுகளையும் அமைத்துத் தரவுள்ளன.



வேறு பல நிறுவனங்களும் வீடுகளை அமைத்து தருவதாகவும் அதற்கான திட்டங்களை சமர்ப்பித் துள்ளன.

இந்த வீடுகள் போரினால் அதிகள வில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங் கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

**சேவையால் உயர்ந்தோனுக்கு பாராட்டுக்கள்**

**உயர்திரு. ஶ்ரீமான் வே.தி.செல்வரட்ணம் அவர்கள்**
(வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர், முன்னாள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்)



18.04.2011 அன்று வட மாகாண கல்வி அமைச் சின் உதவிச் செயலாளரா கப் பதவி உயர்ந்தமையைப் பாராட்டி அகம் மகிழ்கின் றோம்.

அ.தவக்குமாரும் சகோதரரும்
ஆசிரியர் (கோப்பாய்) (C-3137)

## நுளம்பு பெருக்க தடுப்புச் சட்டத்தின்கீழ் உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள உணவகமொன்றில் பொது சுகாதார பரிசோதகர்களால் மேற் கொள்ளப் பட்ட சோதனை நடவடிக்கையின் போது நுளம்பு பெருகுவதற்கு ஏது வான வகையில் வடிகால்கள் மற் றும் உணவக வளாகம் என்பன காணப்பட்டமையால் நுளம்பு பெருக்க தடுப்பு சட்டத்தின் கீழ் யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய் யப்பட்டது.

குறித்த வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா உணவக உரிமையாளருக்கு 15ஆயி ரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப் பளித்தார்.

குறித்த வழக்கு தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நல்லூர் பொதுச்சுகாதார பரிசோ தகர் ஜி.மதனகுமார், கோண்டா வில் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.என்.பிறேம்குமார் ஆகியோர் குறித்த உணவகத்தினை சோதனை யிட்ட போதே மேற்படி சுகாதாரச் சீர்கேடுகள் கண்டுபிடிக்கப்பட்டது.

நுளம்பு பெருக்க தடுப்புச் சட்டத் தின் கீழ் அதிகளவு அபராதம் விதிக் கப்பட்டது இதுவே முதல் முறை.

இதேவேளை இதற்கு முன்னர் நான்கு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு ஒரு வர்த்தக நிலையத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டமை தெரிந்ததே. (ந-6)

**UK Student/Student Visit Visa**

**யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**



மாணவர்களின் நம்பிக்கையை வென்ற நாம் உங்களின் **O/L** தகைமையுடன் **IELTS** அவசியமற்ற வேலை வாய்ப்புடன் கூடிய கல்வியை **U.K** இல் பெற்றுத் தருகின்றோம்.

* கல்லூரியுடன் நேரடித் தொடர்புகள்.
* 'A' Grade கல்லூரி அனுமதிகள்.
* கட்டணத்தை பகுதி பகுதியாக செலுத்தும் வசதிகள்.
* குடும்பமாகச் செல்வதற்குரிய ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.**

அரிய இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

**Genaral Manager- Mr. PRASANNA**

**INTERNATIONAL STUDY CONSULTING LANKA (PVT)LTD**
553,Stanley Road, Jaffna (Rasavinthoddam Junction)
Mobile No: 0779797424, 0750477313
Registration No : PV75227
(4837)

**மரண அறிவித்தல்**

**சின்னத்தம்பி நடராஜா**
(இளைப்பாறிய பொறியியலாளர்)



திருநெல்வேலி கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது 86/2 சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல் வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நட ராஜா (30.04.2011) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சின்னத்தம்பி சிவ பாக்கியம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான பூரணம் நீலாயதாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனுமா வார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (04.05.2011) புதன்கிழமை காலை 9.30 மணியள வில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல் வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

86/2, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
T.P: 0212220559 (4838)

தகவல்
**சி.பிரபாகரன்**
(மருமகன்)
சுதர்சன் மருந்தகம்
பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.

**வேலையாள் தேவை**

யாழ்.நகரில் பிரபல்யம் வாய் ந்த நிறுவனமொன்றிற்கு நன்கு கணனி (Computer) அறிவு பெற்ற க.பொ.த(உ/த) சித்தியடைந்த 20-25 வயதுக்குட்பட்ட யாழ். பட்டணத்துக்கு (Jaffna Town) மிக அண்மையில் வசிக்கும் பெண் பிள்ளை Clerk பதவிக்கு உடன் தேவை.

T.P.No:-0775361774, 0776212688 (4832)

## இன்று ஒரு தகவல்

# ஜனகர் கேட்ட கேள்வி

ஒருவர் ஒரு நாட்டுக்கு அரசராகவும் இருந்து கொண்டு, அதே சமயத்தில் ஞானியாகவும் இருப்பதென்பது சாத்தியமான விடயமா? அது முடியக்கூடிய காரியமா?

முடியும்! அதில் சந்தேகமே வேண்டாம். ஏனெனில், ஜனக மன்னர் அப்படித்தான் இருந்தார். ஜனக மன்னர் ஞானியாகவும் விளங்கியதற்குக் காரணமாக இருந்தவர் ஒரு முனிவர். அவர் தான் யாக்ஞவல்கியர்.

உபநிடதச் சிந்தனைகளைக் கொண்ட பெரிய ஒரு வேதாந்தியாக யாக்ஞவல்கிய முனிவர் விளங்கினார். ஜனக மன்னர் அடிக்கடி யாக்ஞவல்கியரைச் சந்தித்துப் பேசுவது வழக்கம்.

அப்போது மன்னர் கேட்கும் நுட்பமான கேள்விகளுக்கெல்லாம் முனிவர் பதில் சொல்வார். இதுபோன்ற தமது பல உரையாடல்களின் மூலம் உயர்ந்த வேதாந்தக் கருத்துக்களை யாக்ஞவல்கியர் உலக மக்களுக்கு வழங்கியிருந்தார்.

ஒரு சமயம் ஜனகரும் முனிவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜனக மன்னர், "மகரிஷியே! வெளிச்சம் வந்தால் தான் மனிதனுக்கு எல்லாமே விளங்குகிறது. அந்த வெளிச்சத்துக்கு உரிய மூலம் எங்கே இருக்கிறது?" என்று வினவினார்.

"சூரியன் உதித்தவுடன் வெளிச்சம் வருகிறது. அதன் உதவியால் மனிதன் தன் முன்னால் இருப்பது என்ன என்பதை மனிதன் தெரிந்து கொள்கிறான்" என்றார் முனிவர். அதற்கு ஜனகர், "சரி முனிவரே! பகலில் சூரியன் இருக்கிறான்... அதனால் அந்த வெளிச்சத்தின் உதவியால் எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன. ஆனால் சூரியன் மறைந்த பின்னர் இரவு வேளையில் மனிதன் எந்த ஒளியின் உதவியால் செயற்படுகிறான்?" என்று கேட்டார்.

அதற்கு முனிவர், "இரவில் சூரியன் இல்லையென்றாலும் சந்திரன் மூலமாகக் கிடைக்கும் ஒளி இருக்கிறது அல்லவா? அதன் உதவியால் இரவில் மனிதன் செயற்படுகிறான்" என்றார்.

ஜனகர் அத்துடன் விடுவதாயில்லை. மறுபடியும் கேட்டார்: "சூரியன், சந்திரன் ஆகிய இரண்டுமே மறைந்திருக்கும் நேரங்களில் மனிதன் எந்த ஒளியின் உதவியால் இயங்குகிறான்?" என்று கேட்டார்.

அதற்கு யாக்ஞவல்கியர், "சூரியன்-சந்திரன் ஆகிய இரண்டுமே மறைந்திருக்கும் நேரத்தில் பூமியில் உள்ள நெருப்பின் உதவியால் வெளிச்சத்தை உண்டாக்கி மனிதன் செயற்படுகிறான்.

உடனே ஜனகர் தனது அடுத்த கேள்வியைக் கேட்டார். "சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய இந்த மூன்றுமே இல்லாத நேரங்களில் மனிதனுக்கு எந்த ஒளி உதவுகிறது?"

யாக்ஞவல்கியர்: "அரசே ! சூரியன்-சந்திரன்-அக்னி ஆகிய மூன்றும் இல்லாத நேரத்தில் வாக்கிலிருந்து வெளிச்சம் உண்டாகிறது. அதைப் பயன்படுத்தி மனிதன் இயங்குகிறான்."

('வாக்கிலிருந்து வெளிச்சம்' என்பதற்கு இங்கே ஒரு சிறிய விளக்கம் தேவைப்படுகிறது. அதாவது இருட்டான ஓர் அறையில் சிலபேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். பேச்சு மூலமாகக் கிடைக்கும் கருத்து இருக்கிறது அல்லவா? அந்தக் கருத்தின் ஒளியைக் கொண்டு மனிதகுலம் இயங்குகிறது. அல்லது இருட்டில், யாரோ ஒருவர் வருவது போல் தெரிகிறது. "வருவது யார்?" என்று கேட்கிறோம். வருபவர் "நான் தான் ராமன்" என்று சொல்கிறார். அவர் வாக்கிலிருந்து வெளி வந்த சொற்களைக் கொண்டு நாம் விளக்கம் பெறுகிறோம். அதாவது, இப்போது ஸ்தூல ஒளி சூட்சும ஒளியாக வளர்ந்து வழி காட்டுகிறது.)

இவ்வளவு சொன்ன பிறகும் ஜனகர் மேலும் ஒரு கேள்வியைத் தொடுத்தார்: "மகரிஷியே! சூரியனும் இல்லை! சந்திரனும் இல்லை, அக்னியும் இல்லை. வாக்கும் இல்லை! அதாவது, பேச்சுக்கும் இடமில்லை. அந்த நிலையில் மனிதன் இயங்குவதற்கு எந்த ஒளி உதவியாக இருக்கிறது?"

இதற்கு மேலும் யாக்ஞவல்கியர் ஜனகரின் உண்மையை அறிந்து கொள்ளும் ஆவலைச் சோதிக்க விரும்பவில்லை. தாம் சொல்லும் கருத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவநிலையில் ஜனகர் இருக்கிறார் என்பதை அவர் புரிந்து கொண்டார். அதாவது, ஸ்தூலமாகச் சொல்வதிலிருந்து இன்னும் ஆழமாகப் போக வேண்டும். சூட்சுமப் பொருளையும் காரணப் பொருளையும் யாக்ஞவல்கியர் இப்போது நேரிடையாக விளக்க முற்பட்டார்.

"அரசே! ஆன்மாவின் ஒளிதான் உண்மையான ஒளி. அது ஒன்று தான் மனிதன் இயங்குவதற்கு உதவியாக உள்ளது. அதுதான் 'ஞானம்'. மற்ற ஒளியெல்லாம் உலகத்திலுள்ள பொருள்களை மட்டும் தான் காட்டும். அந்த ஒளிகளால் ஞானத்தை காட்ட இயலாது. சூரிய வெளிச்சத்தை வைத்துக் கொண்டு ஞானம் எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடிக்க முடியுமா?

கடவுளுக்கு கற்பூரம் காட்டும் பழக்கம் உண்டு. ஆனால், கற்பூரத்தினால் கடவுளைக் காட்ட முடியாது. சூரியன்-சந்திரன்-நெருப்பு-சொல்-உயிர் ஆக இப்படியிருக்கும் ஐந்தாவது ஒளியே ஆன்மா" என்று யாக்ஞவல்கியர் விளக்கம் தந்தார்.

இந்த ஆன்மாவுக்கும் ஆன்மாவாக பரமாத்மா விளங்குகிறது. இதையே கடவுள் என்றும் அருட் பெருஞ்சோதி என்றும் போற்றுகிறோம். இறைவன் எனப்படும் இந்த பரமாத்மஜோதியை உணர்ந்து கொள்வது அவ்வளவு சுலபமல்ல. "மனிதன் உலகில் செய்யக்கூடிய ஒப்பற்ற காரியமே அது ஒன்றே ஒன்று தான்" என்று பல விதங்களிலும் ஆராய்ந்து நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வர்த்தக விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 105 வர்த்தகர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையின் அலுவலர்கள் கொழும்பிலிருந்து வந்த உயரதிகாரிகளைக் கொண்ட குழுவுடன் யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்நடவடிக்கையின் போது வர்த்தக விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 105 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் வர்த்தக நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு அவற்றின் குற்றங்களை கண்டுபிடித்து அவற்றுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறே கடந்த மாதம் 25, 26 ஆம் திகதிகளில் மேற்குறிப்பிட்டபகுதிகளிலுள்ளவர்த்தக நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன் போது அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் உரிய முறையில் விலைப்பட்டியல் வைக்காது விற்பனை செய்தவர்களுக்கு எதிராவும் குளிர் பானங்களை பொறித்த விலையிலும் பார்க்க கூடிய விலையில் விற்பனை செய்தமை போன்ற குற்றத்தின் பேரில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 26 ஆம் திகதி பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் யாழ். நகர வர்த்தகர்கள் 6 பேருக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்படி மூன்று வர்த்தகர்களுக்கு தலா ஆயிரம் ரூபாவும் ஏனைய மூவரும் எச்சரிக்கையின் பின் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6)

# மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காணிப்பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலக திறப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட செயலகத்தில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக தென்னக்கோன் பண்டாரவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்விழாவில் காணி அமைச்சின் பிரதி அமைச்சர் சிறிபால கமல்நாத், காணி அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ், காணிப்பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி சாந்தி பெனான்டோ, வட மாகாண காணி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் மற்றும் காணி அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத் திணைக்களத்தின் கடமைகளை ஆற்றுவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் ஒவ்வொரு காணிப்பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத் திணைக்களமானது ,காணி அமைச்சின் கீழ் ஒரு பிரிவாக செயற்பட்டு கடந்த வருடம் முதல் தனியானதொரு திணைக்களமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50-60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60-70 | 60 | 75 |
| தக்காளி | 60 | 120 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 80 | 80 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 30 | 30 |
| வாழைக்காய் | 25 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 130 | 130 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 30 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 30 | 40 | 70 |
| லீக்ஸ் | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | - | 80 | 70 |
| முருங்கைக்காய் | 500 | 250 | 400 |
| போஞ்சி | - | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 50 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 60 |

## இராசி பலன்

*03.05.2011*
*(சித்திரை 20,செவ்வாய்க்கிழமை)*
*சூரியஉதயம் காலை 5.57 மணிக்கு*
*அமாவாசை பிற்பகல் 1.01 மணிவரை*
*பரணி பின்னிரவு 4.52 மணிவரை*
*இராகுகாலம் 2.56-4.26 மணிவரை*
*சுபநேரம் 10.26-11.56 மணிவரை*
*சித்திரைப் பரணி,*
*சிறுத்தொண்டர் குரு பூசை*

**மேடம்** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சேமிப்பில் சிறிது கரையலாம், பிரயாணங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தனவரவுகள் தாராளமாக வந்து சேரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழில் நன்மையுண்டு.

**கடகம்** வாழ்க்கைத் தரம் உயர வழி வகை செய்து கொள்ளும் நாள், தொலைபேசி மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர், பேச்சில் தெளிவு பிறக்கும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**கன்னி** கவலைகள் தீர அம்பிகையை வழிபடவேண்டிய நாள்,குடும்பபெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டுபிடிக்கலாம், வாகன பழுதச் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், சென்ற இடத்தில் செல்வாக்குண்டு, திட்டமிட்ட பயணங்கள் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்** மனக்குழப்பங்கள் அதிகரிக்கும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்.

**தனுசு** வாய்ப்புக்கள் வீடு தேடி வரலாம், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், சொத்துக்கள் வாங்க போட்ட திட்டங்கள் கைகூடலாம்.

**மகரம்** சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் புதிய உத்தியைக் கையாள்வீர்கள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றிகள் கிடைக்கலாம், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும், தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவு வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பொருட்சேர்க்கைக்கு வித்திடுவீர்கள், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வளவன்

# ஓசாமா பின் லேடனை எப்படி கொன்றது அமெரிக்க அரசு!

(இஸ்லாமாபாத்)—

**அல் கெய்தா இயக்கத்தின் தலைவர் ஓசாமா பின் லேடன் மறைந்திருந்த கட்டிடத்தை அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத்துறை எப்படி கண்டுபிடித்தது என்பது குறித்த பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஓசாமா பின் லேடனைத் தேடி ஐம்பதிற்கும் மேற்பட்ட அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானங்கள் தாராபோரா மலைத் தொடரில் தேடிவந்த போதிலும் அவரின் மறைவிடத்தை அமெரிக்காவால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அத்துடன் செய்மதித் தொலைபேசியில் ஓசாமா பின் லேடன் உரையாடுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது எனக் கருதிய அமெரிக்காவின் செயற்கை கோள்கள் மென்பொருட்களின் உதவியோடு செய்மதி தொலைபேசி உரையாடல்களையும் கண்காணித்து வந்த போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்த ஓசாமா பின் லேடன் பாகிஸ்தானில் தான் மறைந்திருக்க வேண்டும் என்ற முடிபுக்கு வந்த அமெரிக்கா, அவரைத் தேடி பாகிஸ்தானில் தனது தேடுதல் பணியை தீவிரப்படுத்தியது. ஓசாமா பின் லேடனை பாகிஸ்தானின் உளவுப் பிரிவே மறைத்து வைத்திருக்கின்றது என அமெரிக்கா சுட்டிக்காட்டியிருந்த போது பாகிஸ்தான் அதை முற்றாக மறுத்திருந்தது.

இந்நிலையில் லிபியாவின் ஜனாதிபதி கேணல் கடாபியை இலக்கு வைக்க ஆரம்பித்துள்ள அமெரிக்கா இத்தகையதொரு நிலைமை பாகிஸ்தானுக்கு ஏற்படும் என எச்சரித்திருந்த நிலையில் ஓசாமா பின் லேடன் குறித்த சில தகவல்களை பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு வழங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஓசாமா பின் லேடன் மறைந்திருந்த பிரதேசத்தில் ஊடுருவிய அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையின் உளவாளிகள், சிலரைக் கண்காணிக்க ஆரம்பித்தனர்.

இதனூடாக ஒசாமா பின் லேடனுக்கான கடிதப் பரிமாற்றங்களைச் செய்யும் நபரை அடையாளம் கண்ட அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை இந் நபர் வசித்து வந்த வீட்டை கடந்த ஜனவரி மாதம் அடையாளம் கண்டிருந்தது.

ஆனால் இவரை உடனடியாக கைது செய்து விசாரணை செய்யாத அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறை தொடர்ந்து தவல்களைச் சேகரிப்பதில் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டது.

இஸ்லாமபாத்திலிருந்து 150 கிலோ மீற்றர் தூரத்தில் 18அடி உயரத்தையும் மிக உயர்ந்த சுற்றுச் சுவர்களையும் கொண்ட மூன்று மாடிகள் கொண்ட 2005ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந் நபர் வாழ்ந்து வந்த வீட்டுக்கு தொலைபேசி மற்றும் இன்டர்நெட் இணைப்புகள் கூட இல்லாமல் இருப்பதை அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை கண்டுபிடித்தது. அத்துடன் இவ் வீட்டின் குப்பைகளைக் கூட வெளியில் கொட்டாமல் தங்களது வீட்டுப் பிரதேசத்திற்குள்ளேயே அவர்கள் எரித்து வந்ததையும் அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறை அவதானித்தது.

இவ் வீட்டில் ஒசாமா பின் லேடனுக்கான கடிதங்களைப் பரிமாறும் நபரும் அவரது சகோதரரின் குடும்பங்களையும் தவிர இன்னொரு குடும்பமும் இருப்பதைக் கண்டுபிடித்த அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை அக் குடும்பம் ஓசாமா பின் லேடனின் குடும்பமாக இருக்கலாம் என்ற முடிபுக்கு வந்தது.

இந்த வீட்டை சுற்றி வளைத்து சோதனையிடுவது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஓபாமாவின் தலைமையில் நடைபெற்ற ஐந்து உயர்மட்டக் கூட்டங்களில் பாகிஸ்தானுக்கு தெரியாமல் இப்படை நடவடிக்கை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து முடிபெடுக்கப்பட்டது.

ஆனால் இது குறித்த தகவல்கள் பாகிஸ்தானின் ஆட்சியாளர்களுக்கு தெரியவந்தால் அவர்கள் ஓசாமா பின் லேடனைக் காப்பாற்ற முயற்சிப்பாளர்கள் என்பதால் அமெரிக்கா அது குறித்த எந்தத் தகவல்களையும் பாகிஸ்தானுக்கு வழங்காது மிக இரகசியமாக தமது காய்களை நகர்த்தியது.

இந்நிலையில் இவ் வீட்டில் ஒசாமா பின் லேடன் தனது இளைய மனைவியோடு இருப்பதை அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையின் உளவாளிகள் திட்டவட்டமாக கடந்த வாரம் உறுதிப்படுத்தவே இவ் வீட்டின் மீது தாக்குதல் நடத்த கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி பராக் ஒபாமா அனுமதி வழங்கியுள்ளார்.

இதையடுத்து ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க விமானப் படைத் தளத்திலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு சில உலங்கு வானூர்திகளில் கிளம்பிய அமெரிக்கப் படையினரும் இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து புறப்பட்ட ஒரு படைத் தரப்பும் இந்த வீட்டை முற்றுகையிட்டு தமது தாக்குதல் நடவடிக்கைளை மேற் கொண்டுள்ளனர். இதன் போது அமெரிக்கப் படையினரின் தாக்குதல்களை எதிர்த்து ஒசாமா பின் லேடனும் அவரது பாதுகாவலர்களும் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்த மோதலில் ஒசாமா பின் லேடனும் அவரது மகன் மற்றும் ஒரு பெண் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 40நிமிடங்கள் இடம்பெற்ற இப் படை நடவடிக்கையை முடித்துக் கொண்டு ஓசாமா பின் லேடனின் உடலையும் கைப்பற்றிக் தொண்டு அமெரிக்க உலங்குவானூர்திகள் கிளம்பின.



## சர்வதேச ஊடகங்களில் வெளியான பரபரப்புத் தகவல்

இதன் போது ஒரு உலங்குவானூர்தியில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுவிடவே அந்த உலங்குவானூர்தியை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு ஏனைய உலங்கு வானூர்திகள் கிளம்பிச் சென்றதுடன் பழுதடைந்த உலங்கு வானூர்தியை குண்டு வீசித் தகர்த்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் ஒசாமா பின் லேடனின் உடலைக் கைப்பற்றிய அமெரிக்கா உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்குப் பின்னர் கடலில் வீசியுள்ளதாக அறிவித்துள்ளது. (எ-1)

## சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 21ஆயிரம் முறைப்பாடு

சிறுவர் துஷ்பிரயோக்ம் குறித்து அறிவிப்பதற்கான 1929 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் ஏப்ரல் 30ஆம் திகதி வரை பொதுமக்களிடமிருந்து 21ஆயிரத்து 507 முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்திருப்பதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஜுன் மாதம் இந்த தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. அதே வேளை பல்லாயிரக்கணக்கான முறைப்பாடுகள் கிடைத்தபோதிலும் அவற்றில் 4ஆயிரத்து 323 புகார்கள் மாத்திரமே உண்மையானவை என அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார். இம்மாவட்டங்கள் அடர்த்தியான சனத் தொகையைக் கொண்டிருப்பதே அங்கிருந்து அதிக முறைப்பாடுகள் கிடைப்பதற்குக் காரணம் எனவும் அவர் கூறினார்.

சிறார்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அப்பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதற்காக குழுவொன்றை அமைப்பது குறித்தும் கலந்துரையாடுவதற்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் அண்மையில் சந்தித்ததாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக தேசிய தரவுதளமொன்றை அமைப்பதே இக் குழுவின் பிரதான நோக்கம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க கூறினார். (ச-5)

# ஓசாமா பின் லேடனின் கொலையால் அதிகரித்தது ஒபாமாவின் செல்வாக்கு

(நியூயோர்க்)—

**அல் கெய்தா இயக்கத்தின் தலைவர் ஓசாமா பின் லேடன் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு அந்நாட்டு மக்களிடையே பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

அமெரிக்கப் படையினரால் ஒசாமா பின் லேடன் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து கேள்விப்பட்ட அமெரிக்கர்கள் வெள்ளை மாளிகையின் முன்பு கூடி பராக் ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என கோசங்களை எழுப்பியுள்ளனர்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக பராக் ஒபாமா தெரிவு செய்யப்பட்ட போது அவருக்கு பெரும் செல்வாக்கு இருந்தது. அமெரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்ற பராக் ஒபாமா உலகின் நம்பிக்கை நட்சத்திரமாக அமெரிக்க மக்களால் பார்க்கப்பட்டார்.

அமெரிக்காவில் ஏற்பட்ட பெரும் வேலையில்லாப் பிரச்சினையும் பொருளாதார மந்த நிலையும் சமீப காலமாக அவருக்கு பெரும் சரிவை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் ஒசாமா பின் லேடன் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் அவருக்கு அமெரிக்க மக்களிடையே மீண்டும் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது.


அமெரிக்கப் படையினரால் ஒசாமா பின் லேடன் கொல்லப்பட்ட சம்பவம் குறித்த தகவலை நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பராக் ஒபாமா வெளியிட்டுக் கொண்டிருந்த போது வெள்ளை மாளிகைக்கு வெளியே பெருந்திரளான அமெரிக்க மக்கள் ஒன்றுகூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்துள்ளனர்.


அமெரிக்காவுக்கு பெரும் சவாலை ஏற்படுத்திய இஸ்லாமிய தீவிரவாத தலைவர் கொல்லப்பட்டமை அமெரிக்க மக்கள் இடையே பெரும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சாதிக்க முடியாததை பராக் ஒபாமா சாதித்தது அமெரிக்கர்களிடையே அவர் மீதான நம்பிக்கையை பலமடங்குஅதிகரித்துள்ளது. தீவிரவாதத்திற்கு எதிரான போரில் ஒபாமா பெரும் வெற்றி அடைந்திருப்பதாக அமெரிக்க மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் பராக் ஒபாமா போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அத் தேர்தலில் அவர் பெரும் வெற்றி பெறக்கூடிய வாய்ப்புகளும் அதிகரித்திருப்பதாக தெரிவித்துள்ளன. (ச-5)





சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் கச்சாய் வினோபா பாலர் இல்லமும் இணைந்து நடத்திய க.பொ.த(உ/த) - 2010 பரீட்சையில் 3 ஏ பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு வைபவம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இவ்வைபத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் கலைப் பிரிவில் 3ஏ பெறுபேற்றினைப் பெற்று 3 ஆம் இடத்தினைப் பெற்ற தம்பிராசா தர்சினி எனும் மாணவிக்கு யாழ்/உயர் தொழில்நுட்ப நிறுவன எச்என்டிஏ கற்கைநெறி 3 ஆம் வருட மாணவர்கள் சார்பாக மாணவன் வினுஸ்யன் புலமைப்பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# அரசு- கூட்டமைப்பு பேச்சுவார்த்தை குழுவிற்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைக்கென அமைக்கப்பட்டுள்ள குழுவின் புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவின் தலைவராக கடமையாற்றிய ரட்ணசிறி விக்ரமநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து அப்பதவிக்கு புதியவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து தமக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதென தமிழத் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ரட்ணசிறி விக்ரமநாயக்க பதவி விலகியமை அரசு தரப்புடனான பேச்சுவார்த்தைக்கு இடையூறாக அமையாதெனவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளதால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயார் இல்லை எனத் தெரிவித்து சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)


# மதுபோதையில் கடமையிலிருந்த பத்து பொலிஸார் இடைநிறுத்தம்

அக்கரப்பத்தனைப் பகுதியில் மதுபோதையில் கடமையில் இருந்ததாகக் கைது செய்யப்பட்ட 10 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டிருந்தனர். நேற்று மலையகத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டங்களுக்காக விசேட மே தினக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டவர்களாவர்.

கடமையில் மதுபோதையில் இருந்தபோது கைது செய்யப்பட்ட இவர்கள் 10 பேரையும் பொலிஸ் சேவையிலிருந்து இடை நிறுத்துவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# உண்ணாவிரதம் இருக்கும் இலங்கை அகதிகளை விடுதலை செய்யவேண்டும்



## சீமான் கோரிக்கை

(சென்னை)

பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டு முகாம்களில் உண்ணாவிரதம் இருக்கும் இலங்கை அகதிகளை விடுதலை செய்ய வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

செங்கல்பட்டு முகாமில் 23 தமிழர்களும் பூந்தமல்லி முகாமில் 4 தமிழர்களும் தமிழக அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு இருப்பவர்கள் குற்ற வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டும் உரிய முறையில் பிணை பெற்றும் இருக்கின்றனர். ஆனால் தமிழக அரசு அவர்களை சட்டத்திற்கு புறம்பாக சிறப்புமுகாம் என்ற பெயரில் அங்கு தடுத்து வைத்துள்ளது.

இந்நிலையில், கங்காதரன், சந்திரகுமார், அமலன், ஜெயமோகன் ஆகிய நான்கு பேரும் தங்களை விடுவிக்கக் கோரி பூந்தமல்லி முகாமில் கடந்த 12 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். ஆனால் இவர்களின் கூக்குரல் இதுவரை தமிழக அரசுக்கு எட்டவில்லை. உடனே தமிழக அரசு உண்ணாவிரதம் இருக்கும் பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டு அகதிகளை விடுதலை செய்யவேண்டும் என அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஓமந்தை தடுப்பு முகாம் நேற்று மூடப்பட்டது

(கொழும்பு)

ஓமந்தையில் இயங்கி வந்த இராணு வத்தினரின் தடுப்புக்காவல் முகாம் நேற்று முதல் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஓமந்தை மத்திய மகா வித்தியாலயத்தில் பிரஸ்தாப தடுப்புக்காவல் முகாம் இயங்கி வந்த நிலையில் முகாம் மூடப்படுவதன் காரணமாக பாடசாலைக் கட்டடம் வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளரிடம் நேற்று உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மேமாதம் தொடக்கம் சுமார் 2 வருடங்கள் வரையில் ஓமந்தை மத்திய மகா வித்தியாலயத்தில் இராணுவத்தினரின் தடுப்புக்காவல் முகாம் இயங்கி வந்திருந்தது.

அங்கிருந்த தடுப்புக் காவல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் அனைவரும் தற்போதைக்கு சமூக மயப்படுத்தப்பட்டுள்ளதால் பிரஸ்தாப தடுப்பு முகாம் மூடப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் அறிவித்துள்ளார்.

ஓமந்தை மத்திய மகா வித்தியாலயத்தின் கல்வி நடவடிக்கைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சிங்கராஜவனம்,சிவனொளிபாதமலையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

சப்ரகமுவ மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய இரண்டரைக் கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் சிங்கராஜ வனம், சமனலவெவ மற்றும் சிவனொளிபாத மலை என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அத்துடன் வீதி உட்பட சுற்றாடல் பிரதேசங்களும் மக்கள் பார்வையிடும் பிரதேசங்களிலுள்ள குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படவுள்ளன.

மேலும் கேகாலை மாவட்டத்தில் 3 பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

சப்ரகமுவ மாகா ணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிக்க முடியுமென சப்ரகமுவ மாகாண சுற்றுலாத்துறை அமைச்சர் அத்துலகுமார ராகுபத்த தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


## பட்டமளித்து பாராட்டி கௌரவிப்பு



சமய, சமூக, கலை, இலக்கிய துறைசார்ந்த பணிகளிலும் தெய்வீகப் பேருரை, ஆலய வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனைகள் எனப் பன்முகப்பட்ட பணிகளில் கால் நூற்றாண்டை (25 வருடங்களுக்கு மேலாக) கடந்து அளப்பரிய தேச, தெய்வீகப் பணிகளையாற்றி வருபவரும் பல ஆண்டுகளாக கோப்பாய் தெற்கு அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் உற்சவ காலங்களில் தொடர்ந்து 15 நாட்களும் தெய்வீகப் பேருரைகளை ஆற்றி வருபவருமான

**கவியரசு, கவிமாமணி, செஞ்சொல் ஞானவாரிதி, மகாகவி சாகரம், சிவநெறித்தொண்டர்,**

**வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன்**

(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, அகில இலங்கை சமாதான நீதிவான், வானொலி-தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர்)

அவர்களுக்கு

மேற்படி ஆலயத்தில் இன்று (2011.05.03) செவ்வாய்க்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவின்போது பகல் 11 மணிக்கு திருப்பணிச் சபையினரால் பட்டமளித்து பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பட்டமளித்து பாராட்டுபவர்:

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**

*சமூகவியற்றுறைப் பேராசிரியர்,*

*முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.*

திருப்பணிச் சபையினர்
ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலயம்,
விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (ச-3133)


# வெல்லஎல ஓடையில் வான் விழுந்து விபத்துக்குள்ளாகி 4 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)


மட்டக்களப்பு, பொலநறுவை பிரதான வீதியின் மன்னம்பிட்டி வெல்லஎல ஓடையில் வான் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

ஓடைக்குள் வீழ்ந்த வானிலிருந்து ஒருவர் உயிர் தப்பியதாக பொலிஸார் கூறுகின்றனர். அனர்த்தம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் வானிலிருந்த மேலும் இருவருக்கு என்ன நிகழ்ந்தது என்பது குறித்து தெரியவில்லை என்றும் பொலிஸார் கூறினர்.

காணாமல்போன இரண்டு பேரையும் தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான வானின் சாரதி பொலநறுவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஓடையினுள் வீழ்ந்த வான் நேற்று முன்தினமிரவு கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)






தென்மராட்சி ஆயுர்வேத பாதுகாப்புச் சபை தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மாதர் சங்கங்களுக்கான மூலிகை விழிப்புணர்வுக் கருத்தரங்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத் தலைவர் லயன். எஸ். தேவகுமார் உரையாற்றுவதையும் வளவாளராகக் கலந்துகொண்ட கைதடி யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி வி. சத்தியசீலன் மூலிகை தொடர்பாக விளக்கமளிப்பதையும் படங்களில் காணலாம்.

## உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டி நேற்று யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**ஆண்கள்**

யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், யா/இமையாணன் அ.த.க. பாடசாலை.

**பெண்கள்**

யா/வட இந்து மகளிர் கல்லூரி , யா/வல்வை மகளிர் மகா வித்தி, யா/இமையாணன் அ.த.க.பாடசாலை. (ஸ்ரீ-3-19)




## மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சமுர்த்தி நிவாரணத்தை பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர், க.பொ.த(சா/த) பரீட்சையில் சித்தியடைந்தோர், பல்கலைக் கழகத்திற்கு தெரிவானோர் ஆகியவர்களுக்கான ஊக்குவிப்பு பாராட்டு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான 9 மாணவர்களும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 32 மாணவர்களும் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-24)

## இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு

(மருதங்கேணி)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த தொழில் வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் மற்றும் யுவதிகள் உரிய துறைகளில் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழில் கற்கைநெறிகளில் இணைந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பதிவுகளை கரவெட்டி பிரதேச செயலகத்தில் மேற்காள்வதற்கு சுயவிபரக் கோவையுடன் வருகை தருமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-35)

## பிரதேச செயலாளர் அலுவலக கட்டடங்கள் நிர்மாணம்

(கரவெட்டி)

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச செயலாளர் அலுவலக விவாதக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு சுமார் 55 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ள தாகவும் இவ்வேலைகள் எதிர்வரும் ஆவணி மாதம் நிறைவடையும் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-24)

## மகேஸ்வரி நிதிய கிளை அலுவலகம் தென்மராட்சியில் திறந்துவைப்பு

(அல்வாய்)

வடமராட்சி மக்களின் நன்மை கருதி நெல்லியடி ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அலுவலகத்தின் மகேஸ்வரிநிதிய கிளை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதனை யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பேராசிரியர். திருமதி திலகேஸ்வரி குமுதரஞ்சன் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பனை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்களான திருமதி கமலேஸ்வரி சாந்தகுமார் மற்றும் சோழங்கர் யோகேஸ்வரி ஆகியோர் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர்

இக்கிளைமூல ் வடமராட்சி மக்கள் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மணலுக்கான பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டுக்களை பெறுவது இலகுவாக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

## அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு அபராதம்

(கரவெட்டி)

வாகனத்தை பதிவு செய்யாமல் வாகன அனுமதி பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி சாரதியைக் கைது செய்த சாவகச்சேரி பொலிஸார் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, சாரதி மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக்கண்டு மேற்படி அபராதத்தைச் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

(கரவெட்டி)

சாவகச்சேரி நகரப்பகுதியில் மதுபோதையில் வாகன அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு அபராதமும் செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இச்சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த சாரதி மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் இரு குற்றச்சாட்டுக்கும் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 3 மாத சாதரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## நீதிமன்ற அமர்வில் கைத்தொலைபேசியை ஒலியெழுப்பவிட்ட நபருக்கு அபராதம்

(கரவெட்டி)

நீதிமன்ற வெளி அமர்வின்போது தனது கையடக்கத் தொலைபேசி ஒலி எழுப்பிவிட்ட நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற நீதிமன்ற அமர்வின் போது தனது கையடக்கத் தொலைபேசியை ஒலிக்கவிட்ட திருமலைவாசிக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா 250 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி சங்கத் தலைவர் என். இராஜதேவன் தலைமையில் நடைபெறும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (ஸ்ரீ-3)

## கிளைக்குழுத் தெரிவு

புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தெரிவுகள் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 10 மணிக்கு அந்தந்த கிளைகளுக்கென குறிப்பிட்ட இடங்களில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் தலைமையில நடைபெறவுளளது. வாககளிககத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் தமது கிளைக் குழுத் தெரிவில் பங்குகொண்டு ஒத்துழைக்குமாறு புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

## மஹோற்சவம்

கொக்குவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ காளியம்பாள் ஆலய மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும்.

தினமும் மாலை 6 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கான கதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா தேவி மகத்துவம் பற்றி தெய்வீக தொடர் இசைப்பேருரை நிகழ்த்துவார். (ஸ்ரீ)

## வலைப்பந்தாட்டப் போட்டி

(அல்வாய்)

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் காலை 8 மணிக்கு யா/ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வக்குமரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(குருநகர்)

சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

இதில் கழகத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. தலைவராக அ.யேசுதாசன், செயலாளராக சி.எம்.நெல்சன், பொருளாளராக அன்ரனிப்பிள்ளை யேசுதாசன், உப தலைவராக அ.பீற்றர் குமார், உப செயலாளராக திருமதி.இயூஜின் யூலியஸ், நிர்வாகிகளாக ச.டோமினிக், ம.குயின்ரன், ஆசிரியர்கள் சார்பில் செல்வி கி.தனீஸ்வரியும் மாணவர்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-3-39)

# வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?

சிவல்புரி சிங்காரம்




**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய)**

**“தொழிலில் மாற்றம் தேடி வரும்!**

**துணைகள் யாவும் மாறிவிடும்!”**

கட்டளையிட்டவுடன் செய்யக் காத்திருக்கும் பலபேரைக் கைக்குள் வைத்திருக்கும் கடக இராசி நேயர்களே!

சேவை மனப்பான்மை அதிகம் பெற்றவர்கள் நீங்கள். தேசப்பற்று உங்களிடம் இயல்பாகவே குடிகொண்டிருக்கும். மற்றவர்கள் சொல்வதை மனதில் பதித்துக் கொண்டு, நீங்கள் நினைத்தபடியே செய்து முடிப்பீர்கள். அதிகார பலம் பெற்றவர்களின் நட்பு உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். அன்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, மற்றவர்களின் துன்பத்தை துடைப்பீர்கள்.

உங்கள் இராசியில் உச்சம் பெறுவது குருதான். அந்த உச்சம் பெறும் குருவை, பெயர்ச்சி யாகும் பொழுதெல்லாம், நீங்கள் முன்னதாகவே வழிபாடு செய்தால் அச்சமில்லாத வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல உங்கள் ராசிநாதன் சந்திரனாக விளங்குவதால், நினைவாற்றல் மிக்கவர்களாக விளங்குவீர்கள்.

மாற்று கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுகிற பக்குவம் உங்களுக்கு இல்லை என்றாலும், வீட்டுப் பிரச்சினை, நாட்டுப் பிரச்சினைகளில் சிக்கி அனுபவப்படும் பொழுது, பக்குவம் அடைந்து விடுவீர்கள். குரு வாரத்தில் விரதம் இருந்து, சந்திர பலம் பெற்ற நாளில் அனுகூல தெய்வங்களுக்கு உரிய ஆலயங்களை நோக்கிச் சென்று பரிகாரங்களைச் செய்தால் இனிய வாழ்வு உங்களுக்கு அமையும்.

## பதவி உயர்வு தரும் குருப் பெயர்ச்சி

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் ராசிக்கு இதுவரை ஒன்பதாம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 08.05.2011 முதல் பத்தாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். பத்தில் வந்த குரு பதவியில் மாற்றங்களைக் கொடுப்பார் என்று சொல்வது வழக்கம். பதவி இல்லாதவர்களுக்கு பதவியை வழங்கும். பதவி மற்றும் பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு புதிய இடமாற்றம், இலாக்கா மாற்றங்களை உருவாக்கும். எனவே, அதை மட்டும் நினைத்துப் பயம் கொள்ளாமல் அதன் ஆதிபத்ய அடிப்படையிலும் பார்த்தே குரு எந்தவிதமான பலன்களை வழங்கும் என்பதை துல்லியமாக அறிந்து கொள்ளலாம்.

குரு உங்கள் ராசிக்கு 6, 9க்கு அதிபதியாவார். எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் இடத்திற்கும், தகப்பனார் மற்றும் பயணங்கள் பற்றி குறிக்கும் இடத்திற்கும் அதிபதியான குருபகவான், உங்கள் சுயஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில்தான் பலன்களை வழங்குவார்.

கடன்களை வாங்க வைப்பவரும் குருதான். கடன்களை கொடுத்து நிவர்த்தி செய்ய வைப்பவரும் குருதான். எதிர்ப்புகளை உருவாக்குவதும் குருவின் ஆதிபத்யம்தான். எதிர்ப்புகளை வெல்ல வைப்பதும் குருவின் அருள்தான். அப்படிப்பட்ட குரு உங்கள் ராசிக்கு 10இல் தொழில் மற்றும் செயல் ஸ்தானத்தில் பலம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார்.

வந்த குருவை வரவேற்று, பதிகம் பாடுங்கள். பலன்கள் அதிகமாக கிடைக்கும். கவசம் பாடுங்கள், காலமெல்லாம் வசந்தம் பிறக்கும். “வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே” என்று தொடங்கும் கவசத்தை வியாழக்கிழமை தோறும் மூன்று முறையாவது சொல்லுங்கள். முன்னேற்றங்கள் வந்து சேரும்.

*“பத்திலே குருவும் வந்தால்*
*பதவியில் மாற்றம் சேரும்!*
*முத்தான வாழ்வில் வந்த,*
*முட்டுக்கட்டைகள் அகலும்!*
*கொத்தோடு விலகும் துன்பம்*
*கூடுதல் கவனம் வைத்தால்,*
*தத்தளிக்கின்ற வாழ்வில்*
*தனத்தோடு புகழும் கூடும்!”*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, தொழில் ஸ்தானம் எனப்படும் பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு, சுயஜாதகத்தில் தெசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு தொழில் மாற்றம், இடமாற்றம், உத்யோக மாற்றங்களை உடனடியாக வழங்கலாம். மற்றவர்கள் பயப்படத் தேவையில்லை. பொதுவாக, பொறுப்புகள் மாறுவதை இந்த குரு மாற்றம் உருவாக்கும். குருவை வழிபடுபவர்களுக்கு குருவின் பார்வை பலத்தால், வாழ்க்கைப் பயணம் தொடரும். வளர்ச்சி கூடும். பத்தில் வரும் குருவின் மீது பக்தி செலுத்தினால், முத்தான வாழ்க்கை அமையும்.

## விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!

குருவின் பார்வையால், உங்கள் ராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே, குடும்பத்தில் குதூகலங்கள் அதிகரிக்கப் போகின்றன. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தன வரவு பெருகும். தாராளமாகச் செலவிட ஏராளமான தொகை வந்து சேரும். குடும்ப பொறுப்புகளை அதிகமாக பெற்றிருக்கும் நீங்கள் கடுமையாகப் பிரயாசை எடுத்தும் இதுவரை முடியாத காரியங்களை இப்பொழுது எளிமையாக முடித்து கொள்வீர்கள்.

பிறர் போற்றும் அளவுக்கு நல்ல காரியம ஒன்றைச் செய்ய முன்வருவீர்கள். பங்காளிகள் பக்கபலமாக இருப்பர். பாதியில் நின்ற பணிகள மீதியும் தொடரும். பூர்வீக சொத்து சம்பந்தமாக எடுத்த முடிவு வெற்றி தரும். கடந்த ஓராண்டாக பஞ்சாயத்துக்கள் மூலம் கட்டுப்படாத சகோதரர்கள் இப்போது கட்டுப்படுவர். பெற்றோர்கள் உங்கள் மீது பிரியம் காட்டுவர்.

குடும்பத்தோடு குதூகலப் பயணங்களை மேற்கொள்வீர்கள். அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு அனைத்து காரியங்களையும் முடித்துக் கொடுத்ததற்கு ஆதாயம் கிடைக்கும். அரசியல் வாழ்வில் இருப்பவர்களுக்கு, ஆச்சரியப்படத்தக்க பதவி வந்துசேரும். குடும்பத்தில் பிரிந்தவர்கள் வந்திணைவர். கோவில் விழாக்களை முன்நின்று நடத்துவீர்கள்.

அருமைப் புதல்வர்களால் வருமானம் வந்து சேரும். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு தேங்கிய பணிகளைச் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். சென்ற சில மாதங்களாக மனக்கவலையை ஏற்படுத்திய காரியம் இப்பொழுது மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும். பொன், பொருட்களின் சேர்க்கை கூடும்.

இந்த நேரத்தில் குழந்தைகளின் திருமணத்தை முன்னிட்டு தங்க நகைகளை வாங்கிச் சேர்ப்பீர்கள். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள பல வழிகளிலும் வாய்ப்புகள் உங்களுக்கு வந்து சேரும்.

குருவின் பார்வையால் 4ஆம் இடம், புனிதமடைவதால் தாயின் உடல்நலம் சீராகும். தக்க விதத்தில் வாகன வசதிகள் வந்து சேரும். மனைகட்டி குடியேறும் யோகம் ஒருசிலருக்கு கிடைக்கும். உங்களைப் பற்றி உறவினர்களிடம் அவதூறாகச் சொல்லியவர்கள் இப்பொழுது விலகுவர்.

இருப்பு, எந்திரம், ரியல் எஸ்டேட், மருந்து, மரம் போன்ற துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வசதிகள் அதிகரிக்கும். உடல் நிலையில் முன்னேற்றம் கூடும். உற்சாகத்தோடு பணிபுரிய முன்வருவீர்கள். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெற மாற்று மருத்துவம் உங்களுக்கு கைகொடுக்கும். கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்கு செய்ய வருமானம் வரும் இந்த நேரத்தில் வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருள்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

எதிர்ப்புகள் அகலும். இல்லம் தேடி வரும் விருந்தினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய அருள் தரும் குருவின் ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும் போது திசைமாறிய தெட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்யுங்கள். தித்திக்கும் வாழ்க்கை அமையும். வாகனங்கள் வாங்கும் பொழுது எண் பார்த்து ஏறுவரிசை அடிப்படையில் வாங்கினால், எண்ணற்ற வாகனங்கள் வாங்கும் சூழ்நிலை அமையும். புதிய தொழில் தொடங்கும் பொழுது மனைவி, மக்கள் பெயரில் தொடங்குங்கள். பொருளாதார விருத்தி இரட்டிப்பாக வந்து சேரும்.

## மாற்றங்களைக் கொடுக்கும் குருவின் வக்ர இயக்கம்

மேஷ ராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 18.08.2011 முதல் 15.12.2011 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் ராசிக்கு 6, 9க்கு அதிபதியாக விளங்கும் குரு வக்ரம் பெறும் பொழுது, ஒருபாதி வளர்ச்சியும், ஒரு பாதி தளர்ச்சியும் கொடுப்பார். ஆறுக்கு அதிபதியாக இருப்பதால், கொடுக்கல் - வாங்கல்களில் திடீர் திருப்பம் ஏற்படும். வராத கடன்கள் வசூலாகும். எதிரிகளின் பலம் குறையும். உடல் ஆரோக்கியத்தில் ரண சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொன்ன மருத்துவர்கள், இனி சாதாரண சிகிச்சையே போதுமென்று சொல்லும் அளவிற்கு குணமாகிக் கொண்டே வரும். உத்தியோக மாற்றங்கள் எதிர்பார்த்த படியே வந்து சேரலாம்.

ஒன்பதுக்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால், தந்தை வழி விரோதங்கள் உண்டாகும். பங்காளி பகைகளும், பக்குவமில்லாத உறவினர்களின் தொடர்பால் பிரச்சினைகளும் அடிக்கடி வந்து கொண்டே இருக்கும். வாகனங்களை மாற்றிக் கொள்ள முன்வருவீர்கள். விதியை மாற்றும் தலங்களுக்கு நீங்கள் சென்று வழிபட்டு வந்தால், மதிப்போடும், மரியாதையோடும் வாழ இயலும்.

இந்த குருப்பெயர்ச்சியால் செயலில் வேகம் கூடும். செய்தொழிலில் இலாபம் அதிகரிக்கும். அதன் பார்வை பலத்தால் தாய்வழி ஆதரவு பெருகும். வீடு கட்டி குடியேற வேண்டுமென்ற எண்ணத்தை பூர்த்தி செய்து கொள்வீர்கள். கணவனின் அன்புக்கு பாத்திரமாக வேண்டுமானால், உடன் இருப்பவர்களின் ஆதரவு பெற அனுசரித்துச் செல்லுங்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றங்கள் உருவாகலாம். சிலர் வி.ஆர்.எஸ். வாங்கிக்கொண்டு வீட்டில் இருந்தே தொழில் செய்ய வாய்ப்பு கிட்டும். சுயஜாதகத்தின் படி சகல பாக்கியத்தையும் வழங்கும் தெய்வத்தைத் தேர்ந்தெடுத்து வழிபட்டால், சந்தோஷங்கள் வந்து சேரும்.


பத்தாமிடத்து குருவால் பலன்கள் அதிகம்பெற, வியாழன் தோறும் குருவை வழிபட்டு வருவதோடு, நிம்மதி தரும் தெட்சிணாமூர்த்தியையும் வழிபட்டு, நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

*(தொடரும்)*

# பான் கீ மூனுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை

# —அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்—

## பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிங்கப்பூரில் உள்ள அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேச ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளால் இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகத்தில் அநாவசியக் கருத்துக்கள் வலுப்பெறலாம் என ஆய்வு நிலையத்தின் பேராசிரியர் ரொஹான் குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கைக்கு, ஆர்ப்பாட்டங்களாலும் எதிர்ப்பு நடவடிக்கைகளாலும் பதிலளிக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போர் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இதனையடுத்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டங்களும் கண்டன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலைமை தொடர்பில் விளக்கும் வகையில் சிங்கப்பூரில் அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேச ஆய்வு நிலையத்தின் பேராசிரியர் இதனைக் கூறியுள்ளார். இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சர்வதேச விசாரணைக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என நிபுணர் குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்த விசாரணைகள் இலங்கை அரசாங்கத்தின் ஊடாக நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டினை ஐ.நா.செயலாளர் நாயகம் வெளிப்படுத்தியுள்ளதாக பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனின் உருவப் பொம்மைகள் மற்றும் ஐ.நா சபையின் கொடி ஆகியவற்றை எரியூட்டுவதையும் அந்த அமைப்பின் அதிகாரிகள், அலுவலகங்கள் மற்றும் உடைமைகளுக்கு சேதம்விளைவிப்பதையும் உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கம் மக்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் புத்திசாதுர்யமாக செயற்பட்டு பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என சிங்கப்பூரில் உள்ள அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேசஆய்வு நிலையத்தின் பேராசிரியர் மேலும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் வெளிவிவகார பிரதிய மைச்சர் நியோமால் பெரேராவிடம் வினவிய போது, ஐ.நா.செயலாளர் நாயகத்திற்கு எதிராக ஆர்ப்பார்ட்டங்களையோ அல்லது எதிர்ப்பு நடவடிக்கைகளையோ முன்னெடுக்குமாறு அரசாங்கம் மக்களைத் தூண்டிவிடவில்லை எனப் பதிலளித்தார். ஐ.நா.செயலாளர் நாயகத்தின் உருவப் பொம்மைகளை எரியூட்டுமாறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் அறிவிக்கவில்லை என தெரிவித்த அமைச்சர், அவ்வாறு உருவப் பொம்மைகள் எரியூட்டப்படுமானால் அது குறித்து கவலையடைவதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மணவாளக்கோல விழாவும் பஜனை நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தின் அருள் ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் மணவாளக்கோலவிழாவும் பஜனை நூல் வெளியீடும் நாளை புதன்கிழமை நடைபெறும்.

இதில் காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும். இதனை தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பஜனை நூல்வெளியீடும் நீதிவான் இ.குழந்தைவடிவேலு தலைமையில் இடம்பெறும்.

நூலின் மதிப்பீட்டுரையை கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் சு.பவளகுமார் நிகழ்த்த நூலின் வெளியீட்டுரையை யாழ். சாக்கோ வைத்திய நிலைய டாக்டர் கே.ரி.எஸ். சபாநாதன் ஆற்றுவார்.

பஜனை நூலின் முதல் பிரதியை கைதடி ப.நோ.கூ.சங்க முன்னாள் முகாமையாளர் இ.தணிகாசலம் பெற்றுக்கொள்வார். (ஸ்ரீ-2)

# கழிவுகளை மீள் உற்பத்திக்கு பயன்படுத்தும் திட்டம்

கழிவாக வீசப்படும் பொலித்தீன் போத்தல்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை உடைத்து தூளாக்கும் இயந்திரம் வவுனியா நகர சபைக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்டுள்ள இந்த இயந்திரம் வேப்பங்குளத்தில் உள்ள திண்மக் கழிவுகள கூட்டுப் பசளையாக்கும் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

நாளாந்தம் வவுனியா நகரில் சேகரிக்கப்படும் பொலித்தீன் சார்ந்த பொருட்கள் குறித்த இயந்திரம் மூலம் தூள்களாக்கப்பட்டு மீண்டும் பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது என வவுனியா நகரசபைச் செயலாளர் எஸ்.வசந்தகுமார் தெரிவித்தார்.

இந்த இயந்திரத்தின் பெறுமதி ஆறு இலட்சம் எனவும் குறிப்பிட்ட அவர் வவுனியா நகரில் நாளாந்தம் பெருமளவிலான பொலித்தீன் போத்தல்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் கழிவுகளுடன் வந்து சேருகின்றது. இவை தற்போது தரம்பிரிக்கப்பட்டு மீள் உற்பத்திக்கு பயன்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# லக்ஸபான நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறப்பு

(கொழும்பு)

லக்ஸபான நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நேற்று திறந்துவிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனவியல் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

களனி கங்கையை அண்டியுள்ள மக்களை விழிப்புடனும் எச்சரிக்கையாகவும் இருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, மழை காரணமாக 7 பேர் உயிரிழந்துள்ளனர். 25ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மீரிகம, குருநாகலை புளத்சிங்கள,, பாலிந்த நுவர, ருவன்வெல்ல, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய பகுதிகளின் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

25 ஆயிரம் பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளதாகவும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இந்த மக்களுக்கு உணவுக்காக நாளொன்றுக்கு வழங்கப்பட்ட 100 ரூபாவிலிருந்து 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் எச்.டப்லிப் குணதாச தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பாதுகாப்பு செயலரின் கோரிக்கையை ஏற்க மறுத்தது இந்தியா

(கொழும்பு)

இந்தியாவின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாட முயன்ற பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கோரிக்கையை இந்தியா மறுத்துள்ளது.

தற்போது அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு சென்றிருக்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று அங்கிருந்து திரும்பிவரும் வழியில் இந்தியாவுக்கும் சென்றுவரத் தீர்மானித்திருந்தார்.

இந்தியாவின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடலொன்றை மேற்கொள்வது அவரது நோக்கமாக இருந்துள்ளது. அதற்காக அவர் முறைப்படி இந்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளார்.

ஆயினும் இந்திய அரசாங்கம் அவரது கோரிக்கையை நிராகரித்துள்ளது. இந்திய இராஜதந்திரிகளையோ, சிரேஷ்ட அதிகாரிகளையோ இந்தச் சந்தர்ப்பத்தில் பாதுகாப்புச் செயலாளர் சந்திப்பதற்கு அனுமதி வழங்க முடியாது என்று இந்தியா தெளிவாகத் அறிவித்துள்ளது.

அதன் காரணமாக மூக்குடைபட்ட பாதுகாப்புச் செயலாளர் இந்தியா செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கே நேரடியாகத் திரும்பி வரவுள்ளார். (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் —கால எல்லை நீடிப்பு—

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் மேமாதம் 5ஆம் திகதியுடன் பூர்த்தியாகவிருந்தது. எனினும் அதனை நவம்பர் 15 திகதி வரை நீடிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலொன்று விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றில் பல சரத்துக்களை நீக்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எந்தெந்த சரத்துகளை நீக்குவது என்பது குறித்த அவசர ஆய்வொன்று மேற்கொள்ளப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புதிய துணைவேந்தராக நியமனம் பெற்றுப் பதவியேற்றுள்ள பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணத்தைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா இம்மாத இறுதியில் சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அருகில் உள்ள தென்மராட்சிக் கலை மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி மக்கள் சார்பில் இடம்பெறவுள்ள இந்த விழாவை ஏற்பாடு செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. இதன்போது விழாக் குழுவின் தலைவராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கையிலாயபிள்ளை, செயலாளராக திருக்கணித நிலைய முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம், பொருளாளராக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றச் செயலாளர் க.சுதாகரன் ஆகியோருடன் இருபது பேரைக்கொண்ட விழாக்குழு அமைக்கப்பட்டது.

விழா தொடர்பான ஆலோசனைகளை வழங்க விரும்புவோர் அதிபர் அ.கையில்ாய பிள்ளையுடன் 0212270351 அல்லது 077 4131434 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது akailash 03 @ gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாகவோ தொடர்புகொள்ளலாம் எனவும் விழா தொடர்பான சிறப்புமலர் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது. (ஸ்ரீ-2)


## வட இலங்கை சங்கீத சபையில் "கலாவித்தகரின்" விபரம் கோரல்

1. வட. இ.ச.சபையினால் வெளியிட இருக்கும் அமுத மலரின் "கலாவித்தகர் பட்டம்" பெற்றவர்களின் விபரம் பிரசுரிக்க இருப்பதால் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு உரிய படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 10.05.2011 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்கவும்.

2. மேற்படி மலருக்கு கட்டுரை தர விரும்பும் கலைஞர்கள் 10.05.2011 இற்கு முன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(சி/3134)

# இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்

13



### பிராகிருத மொழிச்சாசனங்கள்

ஆதிகாலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் சாசனங்களை பிராகிருத மொழியில் எழுதினார்கள். பிராகிருதம் கி.பி. நான்காம் நூற்றாண்டுவரை தென்னாசியாமுழுவதிலும் தொடர்பு மொழியாக விளங்கியது.[1] இலங்கையில் வாழ்ந்த எல்லாச்சமூகத்தவரும் பிராகிருத மொழியினையே சாசன மொழியாகப்பயன்படுத்தினார்கள்.[1] இலங்கையிற் சாசன வழக்கான பிராகிருதம் தமிழ் மொழியின் செல்வாக்கினை கணிசமான அளவிற்கு பிரதிபலித்தது. பல தமிழ்ச்சொற்கள் பிராகிருத மொழி இலக்கண அமைதிகளுக்கு ஏற்ப உருமாறிய வடிவத்திலே ஆதியான பிராமிச் சாசனங்களில் வருகின்றன. அவற்றுட் பெரும்பாலானவை பெயர்ச்சொற்கள். அவை இயற் பெயர், காரணப்பெயர், பண்புப் பெயர், பதவிப்பெயர், இன உறவு சம்பந்தமான பெயர், இடப்பெயர் எனப் பலவகைப் படும்.[2]

தமிழ்மொழிக்குச் சிறப்பாகவுரிய ற,ன,ள,ழ ஆகிய எழுத்துக்கள் அவற்றில் இடம் பெற்றுள்ளமை இலங்கைப் பிராமிச் சாசனங்களின் மற்றுமொரு அம்சமாகும்.[3] இப்பண்புகள் சாசனங்களைப் பொறுத்தவரையில் பிரதேச வழக்காகவன்றி சாசனச் செறிவுள்ள இடங்கள் எங்கும் பரந்து காணப்படுகின்றன. நாட்டிலே குறிப்பிடத்தக்களவான தொகையினராக வாழ்ந்த ஒரு சமூகத்தவரின் பேச்சுவழக்கு மொழியாகத் தமிழ் விளங்கியமைக்கு பிராமிச்சாசனங்கள் அடையாளங்களாய் அமைந்து விடுகின்றன.

### கலவோடுகளிற் தமிழ்ச் சொற்கள்

மிக அண்மைக்காலங்களில் அகழ் வாய்வுகள் மூலம் கிடைத்துள்ள கலவோடுகள் பலவற்றிலே தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவை பெருபாலும் பாலும் தனியார்பாவனைக் குரியவை. எனவே அவற்றில் எழுதப் படும் பெயர்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கு மொழியோடு, வீட்டுப்பேச்சு மொழியோடு தொடர்புடையனவாக அமைந்திருக்கும். வட இலங்கையிலே தமிழ் பேச்சுவழக்கு மொழியாக நிலவியதற்கான சான்றுகள் பெருகி வருகின்றன. தமிழ் மொழிவழக்கு நாட்டின் தென்பகுதிகளிலும் பரவியிருந்தமைக்கும் அண்மையிற் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் சில ஆதாரமாயுள்ளன. அவற்றில் மகா சாத்தன், உதிரன், கட(ப்)பன், ந(ா)கர(ா)சந் முதலிய பெயர்கள் காணப் படுகின்றன.[5] இப்பெயர்கள் சிலவற்றின் இறுதியான எழுத்து தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள வரிவடிவமான னகரமாய் அமைந்திருப்பதும் குறிப்பிடற்குரியது. இலங்கையிலே பிராமி எழுத்துக்களின் உபயோகம் பரவுவதற்கு தமிழகத்திலிருந்து சென்ற சமண முனிவர்களும் ஏதுவாகியிருந்தனர் என்று கருதலாம்.

### தமிழர்குடிகளும் தமிழரான சங்கத்தாரும்

இலங்கையிலே தமிழரைக் குறிப்பிடும் பிராமிக் கல்வெட்டுகளிற் பிரதானமானது அநுராதபுரத்தில் உண்டு[6]. அது அபையகிரி கோயில் வளாகத்திற்கு அண்மையில் அமைந்திருக்கிறது. அது கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்குரியது. அதில் வர்ணிக்கப்படும் தமிழர் பரதர் குலத் தவர்இளபர த(ன்) என்ற பெயர் அதிற்காணப் படுகிறது. அது நாகன் என்ற பெயரைப்போன்றது. இளநாக(ன்) அநுராதபுத்து ஆதிகால மன்னரில் ஒருவன்.[7] இச்சாசனம் தமிழ்க் குடிகளைச் சேர்ந்தவர் களையும் (தமேட கஹபதிகன்) தமிழராயுள்ள சங்கத்தாரையும் (தமேடசமண) பற்றியது. குடும்பத்தவரான தமிழருக்கென்று நிர்மாணிக்கப்பட்ட மண்டபம் ஒன்றினைப் பற்றி அதிலே சொல்லப்படுகின்றது. அவர்கள் கடல் வாணிபத்தோடு தொடர்புடையவர்கள் என்பது சாசனக் குறிப்பால் உணரப்படும்.



பேராசிரியர் நொபொறு காறஷீமா அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

இந்தச் சாசனம் அமைப்பிலும் அதிலடங்கிய விவரங்களைப் பொறுத்த வரையிலும் தனிப்பண்புடையது. அது ஏனைய பிராமிச் சாசனங்களிலிருந்தும் வேறுபட்டது. அது தான சாசனமன்று. சங்கத்தாருக்கு நன்கொடை ராவர். ஒன்றாகக் கூடியிருந்த சமண முனிவர்களையும் சங்கம் என்று சொல்வது வழக்கம். திராவிட சங்கம் என்று சமண சமயத்தவரைக் குறிப்பிடுவது புராதனகாலத் தமிழ் வழக்கு என்பது குறிப்பிடற்குரியது. இலங்கை பௌத்த சமய மரபில் மொழி வேற்றுமை காரணமாகவும் இனவேறு பாடு காரணமாகவும் சங்கத்தாரை தமிழ்ச் சங்கத்தாரென்றும் சிங்கள சங்கத்தார் என்றும் வேறுபடுத்திக் குறிப்பிடும் வழக்கம் கி.பி 12 ஆம் நூற்றாண்டு வரை ஏற்பட்டிருக்கவில்லை.

மேலும் இச்சாசனம் காணப்படும் தலத்திலே அபையகிரி விகாரை அமைக்கப்படுவதற்கு முன்பு பௌத்த சமயம் தொடர்பான நிறுவனங்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கவில்லை. அபையகிரி வளாகம் அடங்கிய பிரதேசம் ஆதியிற் சமணர் தலமாக விளங்கியது.

வட்டகாமினி (கி.மு103,89-77) தமிழர்களின் படையெடுப்பொன்றின் காரணமாக அரசிழந்து, அநுராபுரத்திலிருந்து வெளியேறிய சமயத்திலே, கிரி என்னும் சமணத் துறவி அரசனை ஏளனம் பண்ணினார். அதனால் வேதனைப் பட்ட அரசன் அவரைத் தக்கசமயத்தில் பழிவாங்கு வதற்குத் தீர்மானித்தான். மீண்டும் இராசதானியில் அதிகாரம் பெற்றதும், கிரியின் வசமிருந்த சமணப் பள்ளிகளை தகர்த்து அவற்றினிடத்தில் அபையகிரி விகாரையை அமைத்தான்.[8]

அநுராதபுரத்திற் பௌத்த சமயம் நிறுவப்படுவதற்கு முன்பே அங்கு சமணசமயம் பரவியிருந்தது. பாண்டுகாபயன் அநுராதபுரத்தை இராசதானியாக அமைத்திருந்த காலத்தில் அங்கு சமணப்பள்ளிகளையும் ஆசிவிகரின் ஆசிரமங்களையும் பிராமணரின் குடியிருப்புக்களையும் வேதம் ஓதும் மண்டபங்களையும் யாகசாலைகளையும் அமைத்தான் என்று *மகாவம்சம்* கூறும். கிரி, ஜோதி, கும்பாண்ட என்னும் சமணத் துறவிகள் அவனுடைய காலத்தவர்[9]. தென்னிந்தியத் தொடர்புகளின் காரணமாக அநுராதபுரத்திலே சமணசமயம் பரவியது போல தெரிகிறது. தமிழ கத்துப் பிராமிச் சாசனங்களிற் பெரும் பாலானவை சமணசமயம் தொடர்பானவை என்பதும் குறிப் குண்டு என்றும் கருதலாம்.

### அநுராதபுரத்திற் பௌத்தமும் தமிழரும் நாகரும்

அநுராதபுரம் இலங்கையின் மிகப்புராதனமான இராசதானி. அது இலங்கைப் பௌத்தர்களின் புனித நகரமென்று பாராட்டப்படுவது அட்டமத்தானங்கள் என்னும் பௌத்தர்கள் போற்றும் புனிதத்தலங்கள் அங்குள்ளமையாலாகும். மகாபோதி, தூபராமம், மாகாவிகாரை, மிரிசவேதி, றூவன்வலி-சேய, அபையகிரி, ஜேதவனசேதியம், மிகிந்தலை என்பன அத்தலங்களாகும். தேவநம்பியதீசன்காலம் முதலாக விகாரைகளும் கோயில்களும் சங்கத்தார் கல்லூரிகளும் போதனா மண்டபங்களும் மருத்துவமனைகளும் மிகப் பேரளவில் அந்நகரில் அரசராலும் பிரதானிகளாலும் வணிகராலும் அமைக்கப்பட்டன. அவற்றின் அழிபாடுகள் மிகப்பரந்த பிரதேசத்திலே காணப்படுகின்றன. அநுராதபுரத்திலுள்ள தொல்பொருட் சின்னங்க்ள் மிகக் கூடிய அளவிலே சங்கத்தாரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டுள்ளதால் அந்த நகரத்தை ஒரு சங்கத்தார் நகரமென்று சிலர் இந்நாட்களில் வர்ணிப்பர்.

அநுராதபுரத்துப் பௌத்த சமயக்கட்டிடங்களின் அபிவிருத்திகளிலே தமிழ் அரசர்களுக்கும் வணிகருக்கும் கம்மாளருக்கும் தமிழரின் வம்சாவழியினரான அரசர் பலருக்கும் கணிசமான பங்குண்டு என்பது இப்பொழுது தெளிவாகின்றது.

தென்னிந்தியாவிலிருந்தும் படையெடுத்து வந்து, அதிகாரத்தைக் கைப்பற்றிய எல்லாளன் முதலானோரை தமிழ் அரசு என்று *மகாவம்சம்* குறிப்பிடுகின்றது[10]. அநுராதபுரத்தின் ஆதியான தமிழரசான சேனன், குத்திகன் என்போரைப்பற்றிய குறிப்புக்களில் அவர்கள் படையெடுப்பாளர்கள்என்று அந்நூல் கூறவில்லை. அவர்களைக் குதிரை வணிகனின் புதல்வர் (*அஸ்ஸ நாவிக புத்தோ*) என்று மட்டும் அது குறிப்பிடுகின்றது[11] அவர்கள் இலங்கையிலிருந்த தமிழ் வணிகர் என்றும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் அளவிற்கு அவர்கள் பலமும் செல்வாக்கும் பெற்றிருந்தனர் என்றும் கொள்ளமுடிகிறது[12]

பேராசிரியர் சி.பத்மநாதன்
B.A, Ph.D, LFIBA

இன்னொரு வகையான- நாகர் குலத்தவரான- அரசர்பலர் அநுராத புரத்திலே பதவி பெற்றிருந்தனர். மாவம்சம் எழுதப்பட்ட காலத்தில் ஐந்தாம் நூற்றாண்டில், தென்னிலங்கையில் வாழ்ந்த நாகரின் வம்சாவழியினரான நாகர் குலத்தவர் தங்கள் பூர்விக அடையாளங்களை முற்றாக இழந்து விட்டதால் அவர்கள் தென்னிந்திய உற்பத்தியுடையவர்கள், தமிழ் மொழியினைப் பேசியோரின் வம்சாவழியினர் என்ற விபரங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடிய மனோபாவம் அமைந்திருக்கவில்லை.


(தொடரும்)

## அநுராதபுர காலத்துச் சாசனங்கள்

இலங்கையின் வடபகுதியிலும் அநுராதபுரம் போன்ற மத்திய நிலையங்களிலும் கிடைத்துள்ளன. அவைபல நூற்றுக்கணக்கில் வெளிவந்த வண்ணமாய் உள்ளன.[4] கலங்கள் பெரும் வழங்கப்பட்டதாக அதிற்குறிப்பில்லை. பௌத்தசமயம் தொடர்பான தெளிவான குறிப்பெதுவும் அதிற் காணப் படவில்லை. சமண(ர்) என்னும் குழுவினர் பௌத்த சமயத்திற்கு மட்டுமன்றிச் சமணசமயத்திற்கும் உரியோ பிடற்குரியது அவை தமிழ் மொழியில் எழுதப்பட் டுள்ளன. இலங்கையில் பிராமி வடிவங்களின் உபயோகம் பௌத்த சமயம் பரவுவதற்கு முன் வழக்கில் வந்து விட்டது என்றும் அதிற் சமண முனிவருக்கும் பங்








அச்சுவேலி மக்கள் வங்கிக்கிளையில் புதுவருடத்தன்று மகளிருக்கான வனிதா வாசனா, ஆஷ்சர்ய சேட்டிழுப்பு இடம்பெற்றது. இந்நிகழ்வில் இடைக்காடு மகா வித்தியாலய அதிபர் அ. அருந்தவநேசன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் கிளை முகாமையாளர் இ. யோகராஜா, வங்கி உத்தியோகத்தர் ஆகியோர் நிற்பதையும் நிகழ்வில் கலந்து சிறப்பித்த விருந்தினர்களுக்கு கிளை முகாமையாளர் நினைவுப் பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை இரத்து செய்க!

## ரணில் கோரிக்கை



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை இரத்து செய்து உழைக்கும் மக்களுக்கு நலன்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் காரணமாகவே சம்பளவுயர்வு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டாரவளை பிரதேசத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த முடிவின் பின்னர் மக்களுக்கு நன்மைகள் வழங்குவதாக அறிவித்த போதிலும் இதுவரையில் எவ்வித நன்மையும் அளிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறையாண்மைக்கு முரணான வகையில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் இந்த அரசாங்கத்தை மக்களின் நண்பனாக கருதுவதனை விடவும் மக்களின் எதிரியாகவே நோக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சர் தொண்டமானின் ஒப்பந்தம் காரணமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் இன்னமும் 405 ரூபாவாக காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் மட்டுமே சம்பள உயர்விற்காக குரல் கொடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கைக்கு மின்சாரம் விநியோகித்தால் பாரிய போராட்டம் நடத்தப்படும்

## பா.ஜ.க. எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும் நடவடிக்கையை பாரதீய ஜனதா கட்சி ஆட்சேபித்துள்ளது.

தமிழ் நாட்டிற்கே மூவாயிரத்து 700 மெகாவோட் மின்சார பற்றாக்குறை நிலவும் நிலையில் இலங்கைக்கு கடல் வழியாக மின்சார விநியோகத்தைமேற்கொண்டால் அதற்கு எதிராக போராட்டம் நடத்தப்படும் என அந்தக் கட்சியின் மாநில துணைத் தலைவர் ராஜா தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா கட்சி மாநில துணைத் தலைவர் ராஜா, வேலூரில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இந்த ஆட்சேபனையை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு அரசாங்கம் தொடர்பில் போர்க்குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம், காங்கிரஸ் கூட்டணி அரசு ஆகியன இலங்கை அரசாங்கத்தை கண்டிக்கவில்லை எனவும் ராஜா குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை படுகொலையை ஆதரிக்கும் காங்கிரஸ் கூட்டிணியை திராவிட முன்னேற்ற கழகம் முறித்துக் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் 3 ஆயிரத்து 700 மெகாவோட் மின் பற்றாக்குறை உள்ள நிலையில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடல் வழியாக கேபிள் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு மின்சார விநியோகம் மேற்கொண்டால், அனுப்பினால் மக்களை ஒன்று திரட்டி, பாரதிய ஜனதா கட்சி சார்பில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் என ராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)




★ 1494- ஜமெய்க்கா எனப் பின்னர் பெயரிடப்பட்ட நாட்டை முதன் முதலில் கிறிஸ்தோபர் கொலம்பஸ் கண்டார்.

★ 1802- வோஷிங்டன் டிசி நகரமாக்கப்பட்டது.

★ 1814- பிரெஞ்சு மன்னன் நெப்போலியன் பொனபார்ட் எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டு போர்ட்டோஃபெராய்யோ நகரை அடைந்தான்.

★ 1815- டொலெண்டீனோ என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் நேப்பில்ஸ் மன்னன் முராட் ஆஸ்திரியர்களால் தோற்கடிக்கப்பட்டான்.

★ 1879- யாழ்ப்பாணம் கரவெட்டியில் வெல்லனிற் பிள்ளையார் கோயில் திருவிழா ஒன்றின் போது இடம்பெற்ற தீ விபத்தில் 50 பேர் வரையில் தீயில் கருகி உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோர் உடல் ஊனமுற்றனர். கோயில் முழுவதும் எரிந்து சாம்பலானது.

★ 1901- புளோரிடாவின் ஜாக்கன்ஸ்வில் என்ற இடத்தில் இடம்பெற்ற பெரும் தீயினால் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் அழிந்தன. 10,000 பேர் வரையில் வீடுகளை இழந்தனர்.

★ 1916- உயிர்த்த ஞாயிரன்று இடம்பெற்ற கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்ட ஐரிஷ் தலைவர்கள் டப்ளின் நகரில் தூக்கிலிடப்பட்டார்கள்.

★ 1939- சுபாஸ் சந்திரபோஸ் அனைத்திந்திய பார்வார்டு ப்ளாக் கட்சியை ஆராம்பித்தார்.

★ 1941- பி.பி.சி தமிழோசை வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1942- இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய கடற்படையினர் சொலமன் தீவுகளின் துளகி தீவைக் கைப்பற்றினர்.

★ 1959- முதலாவது கிராமி விருதுகள் அறிவிக்கப்பட்டன.

★ 1962- டோக்கியோவில் பயணிகள் தொடரூந்துகள் சரக்கு தொடரூந்துடன் மோதியதில் 160 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1973- சிக்காகோவின் சியேர்ஸ் கோபுரம் உலகின் அதியுயர் கோபுரமானது.

★ 1979- மார்கரெட் தாட்சர் ஐக்கிய இராச்சியத்தின் முதலாவது பெண் பிரதமர் ஆனார்.

★ 1999- ஐக்கிய அமெரிக்காவின் ஒக்லகோமா நகரை சூறாவளி தாக்கியதில் 42 பேர் கொல்லப்பட்டும் 665 பேர் காயமும் அடைந்தனர்.

★ 2002- இந்தியாவின் ராஜஸ்தானில் இராணுவ விமானம் ஒன்று வீழ்ந்ததில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006- ஆர்மீனியாவின் பயணிகள் விமானம் ஒன்று கருங்கடலில் வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1933- ஜேம்ஸ் ப்ரௌன், சோல் இசையின் தந்தை என அழைக்கப்பட்ட அமெரிக்க இசை வல்லுநர் (இ.2006)

★ 1935- சுஜாதா, தமிழ் எழுத்தாளர் (இ.2008)

### இறப்பு

★ 1969- சாகிர் ஹுசைன், மூன்றாவது இந்திய ஜனாதிபதி (பி. 1897)

### சிறப்பு நாட்கள்

★ உலக பத்திரிகை சுதந்திர நாள்

★ போலந்து- அரசியலமைப்பு நாள்

★ ஜப்பான்- அரசியலமைப்பு நாள்





உலக புத்தக தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினால் கோண்டாவில் பொதுநூலகத்தில் வைத்து புதிய நூல்களைக் காட்சிப் படுத்தலும் முன்பள்ளி மாணவர்களுக்கான கதை நேரம் எனும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் திருமதி கடம்பமலர் வில்வராஜா, சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி எஸ். சந்திராதேவி, ஓய்வு பெற்ற பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் திருமதி ரோகினி பரராஜசிங்கம், நூலக ஆலோசகர் குழு உறுப்பினர்கள், வாசக உறுப்பினர்கள், கோண்டாவில் ஸ்ரீவாகினி முன்பள்ளி மற்றும் ஸ்ரீநாராயண முன்பள்ளி மாணவர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# காணாமல் போன உறவுகளை மீட்டுத் தாருங்கள்!!! தடுப்பிலுள்ளோரின் விபரங்களை வெளியிடுங்கள்

## ஜே.வி.பியின் மேதினப் பேரணியில் கோஷம்

காணாமல்போன எமது உறவுகளை மீட்டுத் தாருங்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது உறவுகளின் விபரங்களை வெளியிடுங்கள் என கோஷம் எழுப்பியவாறும் சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணமும் ஜே.வி.பி.யின் மே தினப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

ஜே.வி.பி.யின் மே தினப் பேரணி தெஹிவளை ஜயசிங்க மைதானத்தில் ஆரம்பமானது. ஜயசிங்க மைதானத்தில் ஒன்றுகூடிய ஜே.வி.பி.யினர் பாமன்கடை, கிருலப்பனை ஊடாக பி.ஆர்.சி. மைதானத்திற்குப் பேரணியாக வந்தனர். ஜே.வி.பி.யின் தொழிற்சங்கங்கள் மற்றும் மகளிர் அமைப்புக்கள், ஆசிரியர் சங்கங்கள், மாணவர் சங்கங்கள் என்பன இதில் பங்குபற்றியிருந்தன.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் விலைவாசி ஏற்றம், ஊடகத்துறை அடக்குமுறை, தொழிற்சங்கங்கள் மீதான அடக்குமுறை என்பவற்றுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியதுடன் அரசாங்கத்திற்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் பதாதைகளையும் தாங்கியிருந்தனர். ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் இப்பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணியில்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா, எம்.பி.க்களான அனுரகுமார திஸாநாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோரும் முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் என முக்கியஸ்தர்கள் பலரும் பங்கேற்றனர்.

பேரணிக்கு முன்பாக 60க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் சிவப்புக் கொடி தாங்கிய வண்ணம் ஜே.வி.பி உறுப்பினர்கள் பயணித்தனர். இதனைத் தொடர்ந்து தலைவர்கள் பேரணியாக வருகை தந்தனர்.

பேரணியில் பாடசாலை மாணவர்களுக்குச் சீருடை வழங்குவது தாமதம் காட்டப்படுவதை குறிப்பிடும் வகையில் ஒரு தொகுதி மாணவர்களைப் போல் காட்சியளித்தவர்கள் மேற்சட்டையின்றி பாடசாலை புத்தகப் பைகளைத் தோளில் சுமந்தவாறு வருகை தந்தனர்.

ஜனாதிபதி போல வேடமணிந்த ஒருவரும் பேரணியில் கலந்துகொண்டதுடன் மைதானத்தில் அவர் நிலத்தைத் தொட்டு கும்பிட்டும் ஜனாதிபதி போல் செயற்பட்டார்.

பேரணியில் வடக்குக் கிழக்கிலிருந்தும் மக்கள் வருகை தந்து கலந்துகொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்திருந்தவர்கள் காணாமல் போன தமது உறவுகளை தேடித்தருமாறு கோரும் வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கியிருந்தனர். இதேபோல வவுனியா, திருகோணமலையிலிருந்து வருகை தந்த மக்கள் புனர்வாழ்வு முகாம்களில் உள்ள தமது உறவுகளை விடுவிக்குமாறும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமது உறவுகளின் விபரங்களை வெளியிடும் படியும் கோஷங்களை எழுப்பியதுடன் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

இரண்டு மணிக்கு தெஹிவளை ஜயசிங்க மைதானத்திலிருந்து ஆரம்பமான பேரணி மாலை 4.00 மணியளவில் பி.ஆர்.சி. மைதானத்தை வந்தடைந்தது. அதன்பின்னர் அங்கு கூட்டம் இடம்பெற்றது. கூட்டத்தில் ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உட்பட பலரும் உரையாற்றினர். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் 36 ஆவது ஆண்டு வைகாசி மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணி க்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று மறுநாள் புதன்கிழமை மாலை 7 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

★★★

சரசாலை-நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய கர வருட மஹோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (2)

# பல்கட்சி பேரவையை நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஜே.வி.பி.வலியுறுத்து

(கொழும்பு)

பல்கட்சி பேரவையை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜே.வி.பி கட்சி வலியுறுத்தியுள்ளது.

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு பல்கட்சி பேரவையை பயன்படுத்திக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களில் பல்கட்சி பேரவையின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும் என ஜே.பி.வி கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பீ.ஆர்.சீ.மைதானத்தில் நடை பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைகயிலிருந்து மீள்வதற்கு வழிமுறைகள் காணப்படுவதாகவும் அதனை நடைமுறைப் படுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கம் போலியான தேசப்பற்றை வெளிப்படுத்தி வருவதாகவும் அரசாங்க அதிகாரிகளுக்கு மின்சார நாற்காலி தண்டனை விதிக்கப்படவுள்ளதாக பிரசாரம் செய்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு உத்தியோகத்தரும் மின்சார நாற்காலித் தண்டனையினால் பாதிக்கப்படமாட்டார் என அவர் தெரிவித்துள்ளார்.

உழைக்கும் மக்களின் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் நிபுணர்குழு அறிக்கையை பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை ஜே.வி.பி முற்றுமுழுதாக நிராகரிக்கின்றது என ஜே.வி.வி பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

காலனித்துவ நாடுகளின் தேவைகளுக்காக இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

APRIL 2011 TO SEPT 2011

20

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.05.2011

# எது புனிதத்தலம்?



## ஆன்மீகம் 07

எப்போது தப்பிக்க முயற்சிக்கிறீர்களோ அப்போது அதை எடுத்துப்போக முடியாது. இந்த இடத்தில் 'விழிப்புணர்வு இல்லாமலேகூட யார் நுழைந்தாலும் - வியாபாரத்திற்காக வந்திருக்கலாம், வேலைக்காக வந்திருக்கலாம் இங்கு சுற்றிக் கொண்டிருக்கும் தெரு நாயாகவும் இருக்கலாம்-அனைவருமே இந்த சக்தியால் தாக்கப்படுகிறார்கள். நான் இப்போது சொல்லப்போவதை நீங்கள் வெகு எளிதாக எதேச்சையானது என்றோ அல்லது வேறு காரணம் கண்டு பிடிக்கவோ செய்யலாம். இது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம், இங்கு பக்கத்திலுள்ள ஒவ்வொரு நிலத்திலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் மின்வேலியும் இருக்கிறது. ஆனால் அந்த ஏற்பாடுகளும் வேலிகளும் காட்டு யானைகளாலோ வேறுவிலங்குகளாலோ சேதப்படுத்தப் படுகின்றன. ஆனால் ஒருமுறை கூட எமது ஆசிரமத்திற்கு அப்படி நேர வில்லை. குறிப்பாக நமது மின்வேலி எப்போதும் வேலை செய்வதில்லை. கடந்த 12 வருடங்களாக காட்டுவிலங்குகள் இங்கே எதையும் சேதப் படுத்தவில்லை. அப்படியே அவை வந்தாலும் வாசல் வழியாகவே வந்து வாசல் வழியாகவே போய்விடுகின்றன. இவையெல்லாம் காட்டு விலங்குகளிடமிருந்து எதிர்பார்க்க முடியாத மிகவும் நல்ல நடத்தைகள் அவையெல்லாம் தியானத்தன்மை பெற்றுவிட்டன என்று சொல்ல வில்லை. ஆனால் இங்குள்ள சக்தி நிலையால் அவையும் பாதிப்படைகின்றன.

நீங்கள் இங்கே விழிப்புணர்வின்றி ஒரு கட்டடத்தொழிலாளி போலவோ அல்லது ஒரு தெரு நாய்போலவோ வரவில்லை. ஓரளவு விழிப்புணர்வுடன் வந்திருக்கிறீர்கள். நீங்கள் முழுவிழிப்புணர்வுடன் இல்லை, ஆனால் போதுமான விழிப்புணர்வு உங்களை இது போன்ற இடத்திற்கு அழைத்து வந்திருக்கின்றது. அந்த அளவு விழிப்புணர்வு உங்களுக்குள் இருக்கும்போது, நீங்கள் பின்வாங்கக் கூடாது. பின்வாங்குதல் என்பது மிகவும் முட்டாள்தனமானது. இடைவெளி இருக்கக்கூடாது. 'மஹாமுத்ரா' இடைவெளி இருக்கவே கூடாது. எல்லாநேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஏனெனில் பலர் பல பிறவிகளாக ஆன்மசாதனை செய்து உண்டாக்கும் சூழ்நிலையை நாம் இங்கு உருவாக்க முயற்சிக்கிறோம். அச்சூழலை, இப்பிறவியிலேயே உச்சநிலை உங்களுக்குக் கிடைக்கும்படியான சூழ்நிலை. எனவே மாறாத கவனம் தேவைப்படுகின்றது. இல்லையென்றால் அது உங்களக்கு நிகழாது.

'ஓ, நான் என்ன செய்வது? நான் என்ன செய்வது?' நீங்கள் என்ன செய்வது என்பது விடயமல்ல. எப்படிச் செய்கிறீர்கள் என்பது தான் விடயமே. தினசரி அளவில் 100,200 மக்களுடன் வாழ்வது, தினசரி அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வது, இப்படி வாழும்போது நிறைய விடையங்களை பொறுத்துக் கொள்வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் நினைக்கும் வழியில் சிலர் நினைக்க மாட்டார்கள்; நீங்கள் சாப்பிடுவது போல் அவர்கள் சாப்பிடமாட்டார்கள்; நீங்கள் கழுவுவதுபோல் அவர்கள் கழுவமாட்டார்கள்; ஒவ்வொரு அம்சமும் உங்களை எரிச்சலடையச் செய்யலாம். நீங்கள் நினைப்பதுபோல மக்கள் நினைக்கவோ, உணரவோ, புரிந்து கொள்ளவோ மட்டார்கள். ஒவ்வொரு மனிதரும் அவரவர் வழியில் தனித்தன்மை கொண்டவர்கள். குறிப்பாக இப்போது ஈஷா மக்களும் தனிக் கலாசாரத்தைக் கொண்டவர்களாக மாறிவிடுகிறார்கள். அவர்கள் வேறுவிதமாக உண்ணுகிறர்கள், வேறுவிதமாக நடக்கிறார்கள், வேறுவிதமாகச் சிந்திக்கிறார்கள், வேறுவிதமாக உணர்கிறார்கள்.....

நீங்கள் நினைப்பது போல் மற்றவர்களும் நினைக்க வேண்டுமென நினைத்தால் அது உங்களை பைத்தியத்திற்குத்தான் இட்டுச் செல்லும். மற்றவர் செய்வது பிடிக்கும் அல்லது பிடிக்காது என்பதில் சிக்கிக்கொண்டால் நிச்சயமாக அது உங்களை பைத்தியத்தை நோக்கித்தான் இட்டுச் செல்லும். நீங்கள் உங்களுக்குள் இன்னும் சிறிது ஆழமாகப் பார்க்கத்தெரிந்தவராக இருந்தால் மட்டுமே, உங்கள் மனதை விடவும் சிறிது ஆழமாக ஒன்றைத் தெரிந்து கொள்வீர்கள், உங்கள் சொந்த உணர்ச்சிகளை விடவும் சிறிது ஆழமாக ஒன்றைத் தெரிந்து கொள்வீர்கள், உங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களை விடவும் சிறிது ஆழமாக ஒன்றைத் தெரிந்து கொள்வீர்கள். நீங்கள் சொந்த விப்பு வெறுப்புகளைவிடவும் சிறிது ஆழமான ஒன்றைத் தெரிந்து கொள்வீர்கள். நீங்கள் 100% முழுமையாக விடுபடவில்லை என்றாலும் ஓரளவு நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

(தொடரும்)

# இலங்கையில் ஊடகவியல் கல்விப் போக்கும் நோக்கும்

06

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் சிங்களமொழியில் மாத்திரம் பட்டதாரி மாவணவர்களுக்கு பொதுப்பட்டங்களில் ஒன்றாக ஊடகக்கல்வி ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது விசேட பட்டத்திற்கான பாடத்துறையாக சிங்களத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

களனிப் பல்கலைக்கழகம் சமூகக் கற்கைகள் பீடத்தின் நுண்கலைத் துறையினூடாக ஊடகக் கல்வியை பட்டதாரி மாணவர்களுக்கு கற்பித்து வருகிறது. கடந்த ஏழுவருடங்களாக முதுகலைமாணிக் கற்கைநெறியையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஜயவர்த்தன பல்கலைக் கழகம் தொடர்பாடலும் மொழியும் என்ற துறையினுடாக ஊடகவியல் சார்ந்த கல்வியை பட்டதாரி மாணவர்களுக்கு கற்பித்து வருகிறது: முகாமைத்துவத் துறையில் பட்டப்படிப்பின் பட்டயக் கல்வியை வழங்கிருறது.

திறந்த பல்கலைக்கழகத்தில் சமூகக்கற்கைகள் பீடத்தில் தொடர்பாடல் துறையின் ஊடாக ஊடகவியல் கற்கைநெறிகள் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் நடத்தப்பட்டு வருகிறன.

கடந்த சில வருங்களாக இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் கீழ் இயங்கிவரும் இலங்கை இதழியல் கல்லூரி முழுநேர மூன்று மொழியிலுமான பட்டயக் கற்கைநெறியையும் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

அடுத்த ஆண்டுமுதல் க.பொ.த உயர்தர மாணவர்களின் பாடத் திட்டத்தில் 'வெகுஜனஊடகம்' என்ற பாடத்தையும் புதிதாகச் சேர்த்துக் கொள்வதற்கு கல்வியமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகிறது.

### தமிழில் ஊடகக்கல்வி

இலங்கையைப் பொறுத்த வரைக்கும் ஊடகவியலானது தமிழ் மொழி

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

மூலமாக இலங்கையின் சில பல்கலைக்கழகங்களிலும் சில தனியார் கல்விநிலையங்களிலும் கற்பிக்கப்பட்டு வருவதுடன் இந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் தொலைதூரக் கற்கை நிலையங்கள் ஊடாகவும் முதுகலைமாணி கற்கைகள் கற்பிக்கப்பட்டுவருகின்றன.

ஏற்கனவே நாம் கூறியதுபோல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பல வருடங்களாக தமிழ்மொழிமூலமாக ஒரு வருடகாலத்தையுடைய பட்டயக் கல்வி நடத்தப்பட்டு வருகின்றது. இதில் நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் படித்துப் பயனடைந்துள்ளார்கள். தற்பொழுதும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இக்கற்கைநெறி தொடர்கிறது. இக்கற்கை நெறிக்கு இணைப்பாளராக புவியியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் ஆர்.சிறிக்காந்தன் கடமையாற்றுகிறார்.

இலங்கைத்திறந்த பல்கலைக் கழகத்தில் கடந்தகாலங்களில் தமிழ் மொழிமூலமாக பட்டயக்கற்கை நெறிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. அது கடந்த சில வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் அதனை வழிநடத்துவதற்கான வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை சமூகக்கற்கைகள் துணைத் தலைவர் ஏ.எஸ்.சந்திரபோஸ் மேற் கொண்டுவருகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் கீழ் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஊடகவள இல்லம் தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கான ஊடகக் கற்கைநெறிகளையும் பயிற்சிகள்ளையும் வழங்கிவந்தரோடு பட்டயங்களையம் வழங்கிவந்தது.

இவ்வருடம் முதல் இங்கு பட்டயக் கற்றலை மேற்கொண்டு பட்டயச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழக மூதவை மேற்கொண்ட தீர்மானத்தின் ஆலோசனைக்கு ஏற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் வழங்கிய அனுமதியுடன் பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டு விசேபட்டப் படிப்பை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் இவ்வருடம் பட்டயத்தை மேற்கொண்ட 19மாணவர்கள் முதலாவதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு விசேட பட்டப்படிப்பை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் இவ்வருடம் பட்டயத்தைப் பெற்றுக் கொண்ட 19 மாணவர்கள் முதலாவதாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தென்கிழக்குப் பல்கல்லைக்கழகத்தில் சில வருடங்களுக்கு முன்பட்டயக் கற்கைநெறி ஆரம்பித்து முடிக்கப்பட்டு கடந்தமாதத்தில் பட்டமளிப்பும் இடம்பெற்றது.

எஸ். மோசேஸ்

(தொடரும்)

# நீரிழிவு நோயாளர்களுக்கான உணவுமுறை 8

நாம் பயன்படுத்தும் நூறு கிராம் பொருளில் உள்ள கலோரிகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அரிசியில் 345 கலோரி, கோதுமையில் 344 கலோரி, வெண்ணெயில் 755 கலோரி, நெய்யில் 900 கலோரி, சமையில் எண் ணெயில் 900 கலோரி, கோழி இறைச்சி யில் 173 கலோரி, ஆட்டு இறைச்சியில் 194 கலோரி, ஈரலில் 104 கலோரி, மீனில் 130 கலோரி, உப்புமாவில் 230 கலோரி, சப்பாத் தியில் 200 கலோரி, தேனில் 320 கலோரி, தயிரில் 60 கலோரி, சமபோசாவில் 250 கலோரி, கிச்சடியில் 160 கலோரி, இட்லியில் 132 கலோரி, சாதா தோசையில் 360 கலோரி, முறுக்கில் 529 கலோரி, பொங்கலில் 356 கலோரி, ஊத்தப்பத்தில் 330 கலோரி, பூரி செட்டில் 460 கலோரி, அப்பத்தில் 226 கலோரி, உருளைக் கிழங்கு சிப்ஸில் 565 கலோரி, சொக்லேட் டில் 520 கலோரி, மைசூர் பாகில் 725 கலோரி, ராசகுல்லா 333 கலோரி, பாதாம் அல்வா 560 கலோரி, சர்க்கரை 320 கலோரி, நூறு கிராம் அப்பிளில் 50 முதல் 65 கலோரி, திராட்சையில் 30 முதல் 35 கலோரி, மாம்பழத்தில் 80 முதல் 120 கலோரி, பப்பாளியில் 35 கலோரி, கொய்யாவில் 60 கலோரி, ஓரேஞ்சு, சாத்துக்குடியில் 60 கலோரி, வாழைப்பழத்தில் 120 கலோரி எனத் தோரா யமாக உள்ளது.

காய்கறிகளைச் சாப்பிடும்போது நூறு கிராம்


சிறு கீரையில் 35 கலோரி, வாழைத் தண்டில் 51 கலோரி, வெங்காயத்தில் 59 கலோரி, கத்தரிக்காயில் 24 கலோரி, முருங்கைக்காயில் 26 கலோரி, புடோலில் 18 கலோரி, எலுமிச்சையில் 57 கலோரி, கோஸில் 27 கலோரி, கோலிப்பளவரில் 30 கலோரி, மாங்காய், கரட், கிழங்கு வகைகளில் சுமார் ஐம்பது கலோரி என்ற அடிப்படையில் உள்ளது.

இதெல்லாம் சில உணவுப் பொருட்களில் உள்ள கலோரி சத்துகள். உணவுப் பொருட்களில் உள்ள கலோரிகளை உணவு இயல் மருத்துவ நிபுணரிடம் கேட்டு வாங்கிக் கொள்வது பயனுள்ளதாக அமையும்.

இந்த அடிப்படையில் எப்படி சாப்பிடுவது?

**உணவு முறைகள்**

சராசரி உடல் எடையுடன் இருந்தால் காலை ஆறு மணிக்கு தேநீர் அல்லது




கோப்பி சீனியில்லாமல் ஒரு கப்

**எட்டு மணிக்கு:** இட்லி மூன்று அல்லது சப்பாத்தி நான்கு அல்லது பொங்கல் இரண்டு கப் அல்லது பூரி மூன்று அல்லது காய்கறி சாண்ட்விச், வெள்ளரி அல்லது தக்காளித் துண்டுகள் இரண்டு, ரொட்டி இரண்டு, கொழுப்பில்லாத பால் கால் லீற்றர், பழங்கள் நூறு கிராம். கறிவேப்பிலை, கொத் தமல்லி புதினா, வெங்காயம், பூண்டுதுவையல்சேர்த்துக்கொள்ளலாம்.

கிழங்கு வகைகளையும், தேங்காய் சேர்ப்பதையும் தவிருங்கள்.

**பதினொரு மணிக்கு:** அவித்த முட்டை ஒன்று, கோப்பி அல்லது தேநீர் சீனியில்லாமல் ஒரு கப், மாரி பிஸ்கட் நான்கு வில்லைகள். சமைத்த கீரை ஒரு கப், மோர் அல்லது எலுமிச்சை பழச்சாறு ஒரு கப் போதுமானது. மென்பானங்களைத் தவிர்க்கவேண்டும்.

**ஒரு மணிக்கு:** சப்பாத்தி இரண்டு அல்லது அரிசி ஒரு கப், பீன்ஸ் அல்லது ஒரு கப் சாம்பார் சாதம், தயிர் ஒரு கப், பச்சை காய்கறிகள் ஒரு கப், சாலாடுகள் அரை பிளேட்.

பச்சையான கீரை வகைகள், முள்ளங்கி போன்றவற்றை சாப்பிடலாம். வாழைக்காய் வகைகள், கிழங்குகளை வறுத்த உணவுப் பொருட்களைத் தவிர்க்கவேண்டும்.

**நான்கு மணிக்கு:** பழச்சாறு ஒரு கப் போதுமானது.

**இரவு எட்டு மணிக்கு:** காய் கறிகள் கலந்த சூப் ஒரு கோப்பை, சப்பாத்தி இரண்டு, சோ யா பீன்ஸ் ஒரு கப், காய்கறிகள் முட்டைகோஸ் அல்லது வெண் பூசணி ஒரு கப், பச்சைபீன்ஸ் சாலாடு ஒரு கப் ஆகியவை போதுமானது. வயிறு முட்ட சாப் பிட வேண்டாம்.



இந்த அளவு 1200 கலோரி தேவையுள்ளவர்களுக்கு அடுத்து 1500 கலோரி உள்ளவர்களுக்கு எப்படிப்பட்ட உணவுத் திட்டம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

**காலை ஆறு மணிக்கு:** தேநீர் அல்லது கோப்பி சீனி இல்லாமல் ஒரு கப்.

**எட்டு மணிக்கு:** ரொட்டி இரண்டு துண்டு, அவித்த முட்டை ஒன்று அல்லது பால் இருநூறு மில்லி, பழம் ஒன்று, கோப்பி அல்லது தேநீர் ஒரு கோப்பை.

**பதினொறு மணிக்கு:** ஏதேனும் ஒரு பழம். அதிலும் அதிக சீனிச் சத்து இல்லாத பழமாக இருப்பது நல்லது.

**ஒரு மணிக்கு:** சப்பாத்தி இரண்டு அல்லது அரிசி ஒரு கப், பருப்பு ஒரு கப், பச்சைக் காய்கறிகள் ஒரு கப், தயிர் அரை கப், தக்காளி அல்லது வெள்ளரி ஒரு கப்.


பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D., P.G.D.C.G., D.M.R.,
சென்னை.


**நான்கு மணிக்கு:** தேநீர் அல்லது கோப்பி ஒரு கப், முக்கால் பிளேட் உப்புமா


**இரவு எட்டு மணிக்கு:** சப்பாத்தி இரண்டு, பச்சைப்பயறு ஒரு கப், மீன் அல்லது கோழி இறைச்சி இரண்டு துண்டு, பச்சைக்காய்கறிகள் ஒரு கப், சாலாடு ஒரு கப், தக்காளி அல்லது வெள்ளரி சாலாடு ஒரு கப்.

**பதினொரு மணிக்கு:** பால் ஒரு கப்


(தொடரும்)




# காதில் வரும் கேடுகள் 2



மூக்கில் அடைப்பு, தொடர் தும்மல் ஏற்படுவது ஒருநோய் தானே?




மூக்கில் எலும்பு வளைந்திருந்தாலும், மூக்கில் உள்ள சதைகள் அலர்ஜியினால் வீக்கமடைந்திருந்தாலும் வீக்கம் பாலிப் ஆக மாறிவிடும். இதனால் மூக்கடைப்பு ஏற்படும். மூக்கு எலும்பு வளைந்திருப்பதை சத்திரசிகிச்சை மூலம் சரிசெய்யலாம். மூக்கு சதைகள் அலர்ஜியினால் வீக்கம் அடைந்திருந்தால் மருந்தின் மூலம் வீக்கத்தை சரிசெய்துவிட்டு சதைகளை சத்திரசிகிச்சை மூலம் சரிசெய்ய வேண்டும். சைனஸினால் ஏற்படும் மூக்கடைப்பை சரி செய்யாவிட்டால் அது நாளடைவில் ஆஸ்துமாவில் கொண்டு விட்டுவிடும்.

தொடர் தும்மல், தூசி, காய்கறி அலர்ஜி, மருந்து அலர்ஜி, வாசனை அலர்ஜி போன்றவையினால் மூக்கில் தொடர்ந்து நமைச்சல், உறுத்தல் ஏற்பட்டு தொடர் தும்மல் ஏற்படலாம். இதற்கு-எதனால் அலர்ஜி என்பதைக்கண்டறிந்து அதனைத் தவிர்ப்பது அவசியம். தொடர் தும்மலுக்கும், மூக்கடைப்பிற்கும் நவீன மருந்துகள் உள்ளன.


**சிலருக்கு மூக்கில் இரத்தம் வருகிறதே... அது புற்றுநோயின் அறிகுறியா?**

பெரியவர்களுக்கு இரத்தக் கொதிப்பு அதிகம் ஏற்பட்டு மூக்கு இரத்தக் குழாய் வெடித்து மூக்கில் இரத்தம் வரலாம். சிறு குழந்தைகளுக்கு ஒரு பக்க மூக்கில் இரத்தம் வந்தால் மூக்கில் ஏதோ ஓர் அந்தியப் பொருள் உள்ளது என்று பொருள். அதனை உடன் அகற்றவேண்டும். பெரியவர்களுக்கு சைனஸ் பாதிப்பு, மூக்கில் காளான் தொற்று, சில சமயம் புற்று நோய் கட்டியினால் கூட மூக்கில் இரத்தம் வரலாம். மூக்கில் இரத்தம் வந்தாலே அது புற்றுநோய் கட்டியாகத்தான் இருக்கவேண்டும் என்றில்லை.

**தொண்டையில் கரகரப்பு, குரல் மாற்றம் ஏன்? இதனை எப்படி சரி செய்கிறீர்கள்?**

தொண்டையில் இருக்கும் தொன்ஸில் வீக்கம் அடைந்து அதிலிருந்து சீழ் வந்தால் தொண்டையில் கரகரப்பு, உறுத்தல் தோன்றலாம். பெரிஞ்சைட்டில் என்கிற அலர்ஜி பாதிப்பினாலும் தொண்டை கரகரப்பு ஏற்படலாம்.

குரல் மாற்றம் என்பது கழுத்தில் சிறு ஆர்மோனியப் பெட்டி மாதிரி ஓர் உறுப்பு தைராயிட்டு பின்புறம் உள்ளது. இதற்கு குரல் நாண் என்று பெயர்.




அதிகமாகப் பேசுவதினால் குரல் நாண் பாதிப்படைந்து குரல் மாற்றம் ஏற்படலாம். தொன்சில், அடிநாய்ட் பிரச்சினை, அலர்ஜி பாதிப்பினாலும் குரலில் மாற்றம் ஏற்படும். சில சமயம் தொண்டைப் புற்றினாலும்கூட குரல் மாற்றம் ஏற்படலாம்.

குரல் மாற்றத்திற்கு என்ன காரணம் என்பதனை எண்டாஸ்கோப் மூலம் கண்டறிவோம். இதன் மூலம் குரல் வளையின் தன்மை, வேகம், அதன் செயற்பாடு அனைத்தையும் கண்டறியலாம்.

பின்னர் தேவைக்கேற்ப மருந்து மூலமோ, சத்திரசிகிச்சை மூலமோ குரல் மாற்றத்தை சரி செய்யலாம். குரல் வளையில் புற்று நோய்க் கட்டி இருந்தால் ஆரம்ப நிலையி லேயே கண்டிறிந்து சத்திரசிகிச்சை அளித்தால் குரல் வளையைக் காப்பாற்றி விடலாம்.

தைரோய்டில் கட்டி இருந்தாலும் சிலருக்குக் குரல் மாறலாம். இதற்குத் தைரோய்டு பிரச்சினையை சரி செய்தால் தானாகவே குரல் மாற்றம் சரியாகிவிடும். சைனசி னால் கூட சிலருக்குக் குரல் மாற்றம் வரலாம். சைனஸை சரி செய்ய குரல் சரியாகிவிடும்.


டாக்டர் எஸ்.இராமகிருஷ்ணன்,
MBBS., DLO., சென்னை


(முற்றும்)

# இலங்கையை உலுப்பிவரும்
# ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை

**தமிழாக்கம் தொடர் 2**

**அறிமுகம்**

*1)* கருத்து வேறுபாடுகளுக்கிடையே துன்பம் மிகுந்த விதத்தில் இலங்கையில் யுத்தம் முடிவடைந்தது. அதன் இரக்கமற்ற தன்மைக்கு பெயர்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு 27 வருடங்களுக்குப் பின்னர் ஆயுதமேந்திய மோதல் முடிவுக்கு வந்ததையிட்டு இலங்கையர் பலரும் உலகம் முழுவதில் உள்ள ஏனையவர்களும் மன ஆறுதல் அடைந்தனர்.



ஆயினும், நாட்டின் ஆயுதப்படையினர் வெற்றியை அடைவதற்காகக் கையாண்ட வழிமுறைகள் பற்றி இலங்கை மற்றும் ஏனைய இடங்களில் உள்ளவர்கள் அதிக மனத்தாக்கம் அடைந்தனர். நாட்டின் வடகிழக்குக் கரையோரப்பகுதியான வன்னியின் ஒரு சிறிய இடத்தில் தப்பியோட முடியாமல் மும்முரமாக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கிடையே பல இலட்சக்கணக்கான தமிழ் பிரஜைகள் சிக்குண்டிருப்பதை அதிகரித்து வரும் அச்சத்துடன் பல மாதங்களாக அவர்கள் நோக்கிய வண்ணம் இருந்தனர்.

உயிரிழந்த மற்றும் காயமடைந்த பிரஜைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்தது. அரசாங்க தரப்பிலிருந்து எறியப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் பொதுமக்கள் சிக்கினர் அப்பகுதியில் இருந்து தப்பியோட முயற்சித்தபோது பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட பலரை எல்ரிரிஈ இனர் சுட்டனர். மனிதாபிமான உதவிக்கான தேவை அதிகரித்த போதிலும், அரசாங்கத்தினால் அது தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டது.

அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு வசதியாக யுத்தத்தைப் போதியளவு தளர்த்துவதற்கான முயற்சிகள் தடுமாற்றமடைந்தன.

*2)* மோதல் வலயத்தில் இருந்து பாரபட்சமற்ற அறிக்கை விடுத்தலுக்குத் தட்டுப்பாடு நிலவியதால், 2009 மே மாதம் 19ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி வெற்றியைப் பிரகடனப்படுத்திய நாள் வரை இறுதி இராணுவத் தாக்குதலின் போதே என்ன நேர்ந்தது என்பதை சரியாக நிர்ணயிப்பது சிரமாக இருந்தது.

ஆயினும், அரசாங்கம் அப்பிரதேசத்தில் இருந்ததாக முன்னர் கூறிய மதிப்பீட்டை அதிக எண்ணிக்கையால் விஞ்சுமளவிற்கு யுத்த வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 2 இலட்சத்து 90 ஆயிரம் மக்கள் மூடப்பட்ட முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர்.

பாரிய காயங்களுக்கு இலக்காகிய பலர் அடங்கிய சுமார் 14 ஆயிரம் மக்கள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினால் கடல் மார்க்கமாக பாதுகாப்பான இடத்துக்கு அகற்றப் பட்டனர். எல்லா அறிகுறிகளின்படி, மரணித்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்ததோடு, இன்று கூட சரியான கணிப்பொன்று நிர்ணயிக்கப்படவில்லை.

எனினும், "பூஜ்ய பொதுமக்கள் சேதத்துடன்" தான் "மனிதாபிமான மீட்பு நடவடிக்கையொன்றினை" மேற்கொண்டதாக அரசாங்கம் உறுதியாக வாதிட்டு வந்துள்ளது.

*3)* யுத்தம் முடிவுற்று மூன்று நாட்களுக்குப் பின்னரே செயலாளர் நாயகம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டதோடு மோதல் வலயத்தின் சில இடங்களையும் மோதல் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான ஒரு முகாமையும் அவர் நேரடியாகப் பார்வையிட்டார்.

அவரின் விஜயத்தின் முடிவில், இலங்கை ஜனாதிபதியுடன் இணைந்து செயலாளர் நாயகம் கூட்டு அறிக்கையொன்றை விடுத்தார். இராணுவ நடவடிக்கைகளின் போது நேர்ந்த சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்காக பொறுப்புக்கூறும் ஒரு செயற்பாட்டின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் அதில் வலியுறுத்தினார் என்பதோடு அத்தகைய இன்னல்கள் பற்றிய நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

நிபுணர்கள் குழுவின் நியமனம் அந்த கூட்டு அறிக்கையின் தொடர் நடவடிக்கையாக செயலாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகும்.

*4)* யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் தொடர்பான கூட்டு இணக்கப்பாட்டை அமுல் செய்வது பற்றி செயலாளர் நாயகத்துக்கு அறிவுரை வழங்குவது குழுவின் ஆணையாகும்.

இவ்வறிக்கையில் இக்குழு குற்றஞ்சாட்டப்பட்ட சர்வதேச சட்டங்களின் மீறல்களின் சுபாவம் மற்றும் அவற்றின் நோக்கெல்லை அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் பதில் ஆகியவற்றை மதிப்பீடு செய்கிறது.

குறிப்பாக, கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழு சர்வதேச தரங்கள் மற்றும் ஒப்பீட்டளவிலான அனுபவங்கள் ஆகியவற்றின் பின்னணியில் மதிப்பீடு செய்யப்படுகிறது. இலங்கையின் சட்ட அமைப்பு மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பான உள்நாட்டு நிறுவனங்களையும் குழு மறுபரிசீலனை செய்கிறது.

அதன் செயற்பாடு முழுவதிலும், இலங்கையின் வரலாற்று மற்றும் அரசியல் சூழ்நிலைப் பொருத்தங்களையும் பொறுப்புக் கூறல் பற்றிய இலங்கையின் தற்கால சூழலையும் குழு கவனத்துக்கு எடுத்துக் கொண்டது.

இவ்வறிக்கை குழு மேற்கொண்ட செயற்பாட்டின் பிரதிபலானாகவுள்ளதோடு சிபாரிசுகள் தொகுதிகளாக செயலாளர் நாயகத்துக்கான அறிவுறுத்தலையும் அது உள்ளடக்குகிறது.

i) ஆணை, தொகுப்பு மற்றும் வேலைத் திட்டம்.

அ) குழுவினை அமைத்தல்.

5) இலங்கையின் ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களின்போது குற்றஞ்சாட்டப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்



கூறல் விடயங்கள் பற்றித் தனக்கு அறிவுரை வழங்குவதற்காக 2010 யூன் 22ஆம் திகதி இக்குழுவின் நியமனத்தை செயலாளர் நாயகம் அறிவித்தார்.

குழுவின் நோக்கெல்லை பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டது:

செயலாளர் நாயகமும் இலங்கை ஜனாதிபதியும், 2009 மே 23ஆம் திகதி நாட்டுக்கான செயலாளர் நாயகத்தின் விஜயத்தின் முடிவில் விடுத்த கூட்டு அறிக்கையில், இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இராணுவ நடவடிக்கைகளின் போது நேர்ந்த சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்காக பொறுப்புக்கூறும் ஒரு செயற்பாட்டின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் அதில் வலியுறுத்தினார்.

அத்தகைய இன்னல்கள் பற்றிய நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். இத்தருணத்தில் மற்றும் இதன் பின்னணியில்:

i) யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் தொடர்பாக சொல்லப்பட்ட உறுதிப்பாட்டினை அமுல் செய்வதற்காக தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர்கள் குழுவொன்றை அமைப்பதற்கு செயலாளர் நாயகம் தீர்மானித்தார்.

ii) குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லை பற்றியவற்றைக் கவனத்துக்கெடுத்து, கூட்டு அறிக்கையின் பொறுப்புக் கூறுவதற்கான செயற்பாடு பற்றிய உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதற்கானதோதான முறைமைகள், ஏற்புடைத்தான சர்வதேச தரங்கள் மற்றும் ஒப்பீட்டளவிலான அனுபவம் பற்றிய செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவது குழுவின் குறிக்கோளாகும்.

iii) ஏற்ற மற்றும் சம்பந்தப்பட்ட அனுபவத்தைக் கொண்ட மூன்று உறுப்பினர்களை அது கொண்டிருக்கும். குழு அதற்கென்றே தனது செயற்பாட்டு முறைமைகளை ஏற்படுத்திக் கொள்வதோடு OHCHR இன் துணையோடு செயலகமொன்று அதற்கு உதவி வழங்கும்.

iv) அது செயற்பாட்டை ஆரம்பித்து நான்கு மாதங்களுக்குள் குழு அதன் அறிக்கையை செயலாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

v) குழுவுக்கான நிதியளிப்பு செய்லாளர் நாயகத்தின் எதிர்பாராத நிகழ்வுகள் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

vi) மர்சுக்கி தாருஸ்ஸமான் (இந்தோனேசியா), தலைவர்; ஸ்ரீவன் ரத்னர் (ஐக்கிய அமெரிக்கக் குடியரசு மற்றும் யஸ்மின் சூக்கா (தென் ஆபிரிக்கா) ஆகியவர்களை குழுவின் உறுப்பினர்களாக செயலாளர் நாயகம் நியமித்தார். *(தொடரும்)*

# 2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் 1.9 இலட்சம் கோடி ரூபாய் ஊழல்

## பாராளுமன்ற பொதுக்கணக்கு குழு அறிக்கை சமர்ப்பிப்பு

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நடந்த ஊழல் குறித்து விசாரித்த பாராளுமன்றில் பொது கணக்கு குழு இந்த ஊழல் அரங்கேறியதற்கு காரணமே,பிரதமர் அலுவலகத்தின் பொறுப்பற்ற செயல்தான் என விமர்சிப்பது, அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு குறித்து விசாரிக்குமாறு பாராளுமன்றின் பொதுக்கணக்கு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அக்குழுவின் தலைவராக பாரதீய ஜனதா கட்சியை சேர்ந்த முரளிமனோகர் ஜோஷி நியமிக்கப்பட்டார்.அது பற்றி விசாரணை நடத்திய குழு தனது அறிக்கையை தாக்கல் செய்த நிலையில் காங்-தி.மு.க. உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டு அறிக்கை வெளிவராமல் முறியடித்து விட்டனர். விசாரணை நடத்திய குழு பல முறைகேடுகளையும் என்ன நடந்தது என்பது பற்றி மனம் திறந்து விமர்சித்து இருந்தது தான் பிரச்சினைக்கு காரணம்.

இந்த ஊழல் அரங்கேறியதற்கு முழு முதற் காரணம் பிரதமர் அலுவலகத்தின் பொறுப்பற்ற செயல் தான். அலைக்கற்றை ஊழல் வெளியாகி, எதிர்க்கட்சிகள் பிரச்சினையை கிளப்பிய போது பிரதமர் மன்மோகன் சிங் இது குறித்து விசாரிக்கும் பொதுக் கணக்கு குழு முன் ஆஜராகி விசாரணைக்கு ஒத்துழைப்பேன் என்று குறிப்பிட்டு இருந்தார்.

இந்நிலையில் பொதுக் கணக்கு குழு தனது ஆய்வுக்கு பின் பிரதமர் அலுவலகம் மீது பல்வேறு சந்தேகங்கள் கிளம்பியது. மத்திய தணிக்கை அதிகாரி கணக்குப்படி இந்த ஊழல் 1.76 இலட்சம் கோடி தான் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் பி.ஏ.சி.யோ 1.90 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு இருக்கும் என்கிறது.

அலைக்கற்றை ஒதுக்கீட்டில் அப்போதைய அமைச்சர் ராஜா செய்த முறைகேடுகளை பிரதமரின் கவனத்திற்கு பிரதமர் அலுவலகம் கொண்டு செல்ல தவறிவிட்டது. குறிப்பாக ராஜா கடைப்பிடித்த முதலில் வருவோருக்கு முதல் ஒதுக்கிடு என்ற சந்தேகத்திற்குரிய முறையை பிரதமருக்கு தெரிவிக்காமல் போனதால் ராஜா பயன் அடைவதற்கு சாதகமாக அமைந்து விட்டது.

பிரதமர் அலுவலகத்திற்கு பாதி உண்மையை தெரிவித்தும் பாதியை மறைத்தும் ராஜா செயற்பட்டு இலஞ்சம் பெற்றுக் கொண்டு விதிமுறைகளை வளைத்து ஒதுக்கீடு மற்றும் உரிமம் வழங்கியுள்ளார். குறிப்பாக தொலைத் தொடர்புத்துறையில் முக்கிய முடிவுகளை எடுக்கும் டெலிகொம் கமிஷனையே தனக்கு சாதகமாக்கி தனக்கு வேண்டிய கம்பனிகளுக்கு ஒதுக்கிடு செய்துள்ளார். இந்த சூழ்நிலையில் அலைக்கற்றை விவகாரத்தை கைகழுவி விடாமல் இதில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்பதை கண்டறிய வேண்டும் என பி.ஏ.சி. அறிக்கையில் கருத்து கூறப்பட்டிருக்கிறது. (ஸ்ரீ)

## தமிழக தேர்தல் முடிவை கணிக்க முடியவில்லை

### ப.சிதம்பரம் தெரிவிப்பு

மற்ற மாநிலங்களைப் காட்டிலும் தமிழகத்தில் எந்தக்கூட்டணி வெற்றி பெறும் என்பதை கணிக்க முடியாத நிலை உள்ளது என மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

வெற்றியோ, தோல்வியோ தேர்தல் முடிவுகள் எப்படியிருந்தாலும் அதை ஏற்றுக் கொண்டு பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும் என காங்கிரஸ் கட்சியினருக்கு அவர் அறிவுரை கூறினார். சிவகங்கையில் தேர்தல் பணிகள் குறித்த கருத்துக் கேட்புக் கூட்டம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட சிதம்பரம் மேலும் பேசியதாவது, தமிழ்நாடு, கேரளம், அசாம், புதுச்சேரி, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் சட்டப் பேரவைத் தேர்தல்கள் நடந்துள்ளன. ஆனால், தமிழகத்தில் மட்டும் தான் தேர்தல் ஆணையம் அதிக கெடுபிடி காட்டியுள்ளது. இதற்கான காரணம் குறித்து தேர்தல் முடிவுகள் வெளியான பின் தேர்தல் ஆணையத்திடம் விளக்கம் கேட்கப்படும். தமிழகத்தில் தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் என்பதைக் கணிக்க முடியாத நிலையே உள்ளது என்றார். (ஸ்ரீ)

# அலைக்கற்றை விவகாரத்தில் ஏற்பட்ட கசப்புணர்வை மாற்றுவதற்கு முயற்சி

## தமிழக முதல்வருடன் காங்.தலைவர்கள் சந்திப்பு

2 ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது குற்றப் பத்திகையில் கனிமொழி எம்.பி.யின் பெயர் இடம் பெற்றுள்ளதை தொடர்ந்து காங்கிரஸ்- தி.மு.க. இடையே கசப்புணர்வு வளராமல் இருக்க முதல்வர் கருணாநிதியை காங்கிரஸ் தலைவர்கள் சந்தித்து வருகின்றார்கள்.

அலைக்கற்றை ஊழல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் கனிமொழி எம்.பி.யின் பெயர் இடம் பெற்றது. அதை சி.பி.ஐ கையாண்ட விதமும் முதல்வர் கருணாநிதியை எரிச்சல் அடைய வைத்தது.

இதையடுத்து தி.மு.க. உயர்நிலை செயற்றிட்டக் குழுக்கூட்டம் அறிவாலயத்தில் நடந்தது. அக்கூட்டத்தில் அலைக்கற்றை வழக்கை சட்டரீதியாக மேற்கொள்வது என்ற முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அக்கூட்டத்தில் காங்கிரஸ் மேலிடம் மீது தி.மு.க. இரண்டாம் கட்டத் தலைவர்கள் சிலர் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியதாக கூறப்படுகின்றது.

இதற்கிடையில் தனியார் தொலைக் காட்சி நிறுவனம் ஒன்று வெளியிட்ட கருத்துக் கணிப்பில் தி.மு.க மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என அறிவித்தது.

அந்த நிலையில் கடந்த சனிக்கிழமை முதல்வர் கருணாநிதியை அவரது கோபாலபுரம் இல்லத்தில் அகில இந்திய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் சந்தித்துப் பேசினார்.

வெளியே வந்த ஜெயந்தி நிருபர்களிடம் கூறும் போது,

காங்கிரஸ் தி.மு.க கூட்டணியில் எந்த விரிசலும் கிடையாது. அலைக்கற்றை விவகாரம் குறித்து உயர்நீதிமன்றில் ஆரம்பித்து பல்வேறு அமைப்புகளால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் சட்டவழி செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதனால் கூட்டணியில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை என்றார்.

அவரைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் வாசன், முதல்வர் கருணாநிதியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். அப்போது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வெற்றி மிகவும் பிரகாசமாக உள்ளது. அதிக இடங்களில் நாங்கள் வெற்றி பெறுவோம் என கூறினார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் குழப்பத்தை உருவாக்க அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா நினைக்கிறார் என்ற குற்றச்சாட்டையும் முதல்வர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட கேள்வி-பதில் அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் மத்திய கூட்டணியில் இருந்து தி.மு.க.வை வெளியேற்ற சதி நடப்பதாகவும் தெரிவித்தார்.

இதன் பின்னணியில் தான் மத்தியில் காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. நீடிக்கிறது என்றும் எந்த பிரச்சினையும் இல்லை என்றும் உறுதிப்படுத்தவும் அலைக்கற்றை விவ காரத்தில் ஏற்பட்ட கசப்புணர்வை போக்கவும் காங்கிரஸ் தலைவர்கள் அடுத்தடுத்து முதல்வரை சந்தித்துப் பேசி வருவதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவும் முதல்வரை சந்தித்து தன் முழு ஆதரவையும் தந்திருக்கிறார்

மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் மட்டும் முதல்வரை இன்னும் சந்திக்கவில்லை. அவரும் விரைவில் சந்திப்பார் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் மேலிடத்தின் விருப்பப்படியே தமிழக தலைவர்கள் முதல்வர் கருணாநிதியை சந்தித்து வருவதாக கூறப்படுகிறது.

(ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

# தனித்து ஆட்சியமைக்க அ.தி.மு.க.ஆலோசனை

(சென்னை)

தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் பட்சத்தில் தனித்து ஆட்சி அமைக்க அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதா ஆலோசனை நடத்தி வருகிறார்.

சொல் பேச்சு கேட்கும் கட்சிகளை மட்டும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு மீதமுள்ளவற்றை கழற்றி விடும் முடிவில் உள்ள அவர் சிரேஷ்ட மாவட்ட செயலர்களுக்கு இம்முறை அமைச்சர் பதவி வழங்கவும் திட்டமிட்டுள்ளார்.

கடந்த 2006 வரை ஆட்சிக்கட்டில் இருந்த அ.தி.மு.க.வுக்கு இம்முறை மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாக அ.தி.மு.க.வினர் கூறி வருகின்றனர்.

தி.மு.க. அரசு மீதான குற்றச்சாட்டுக்கள், அ.தி.மு.க.வின் கூட்டணி பலம் ஆகியவை அவர்களுக்கு வெற்றியை தேடித்தரலாம். சிறு, குறுகட்சிகளை சேர்த்துக் கொண்டு சட்டசபை தேர்தலில் களம் கண்ட ஜெயலலிதா வெற்றி நமதே என்ற நம்பிக்கையில் உள்ளார்.

தே.மு.தி.க. வைப் பொறுத்தமட்டில் கூட்டணியில் இருந்தாலும் அது பெயரளவுக்கு மட்டுமே என அ.தி.மு.க.வினர் கூறி வருகின்றனர். அ.தி.மு.க.தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் போது தே.மு.தி.க. கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளை கழற்றி விட்டு சிறிய கட்சிகளை மட்டும் வைத்துக் கொண்டு ஆட்சியில் அமர ஜெயலலிதா முடிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஓய்வுக்காக கோடநாடு சென்றுள்ள அவர் ஆட்சி அமைப்பது, அமைச்சர் பட்டியல் குறித்து மாநில நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். தி.மு.க.வை காட்டிலும் அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சரவை விசாலமாக இருக்கும். 35 பேர் வரை அமைச்சர் பட்டியலில் இடம் பெறக்கூடும்.

மாநில நிர்வாகிகளுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டாலும் மாவட்ட செயலர்களில் சீனியர், எவ்வித புகாருக்கும் இடம் தராமல் கட்சி தாவாமல் ஒதுக்கிய தொகுதிகளில் வெற்றிகளை தேடித்தந்தவர்களுக்கு அமைச்சர் பொறுப்பு வழங்கவும் ஜெயலலிதா முடிவு செய்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# சத்ய சாய்பாபாவின் சிலையை நன்கொடையாக அளித்த சச்சின்

(புட்டபர்த்தி)

புட்டபர்த்தியில் சாய்பாபாவின் மகா சமாதி அருகே கட்டப்படவுள்ள மண்டபத்தில் வைப்பதற்காக பளிங்குக் கல்லால் உருவாக்ககப்பட்ட சிலையை நன்கொடையாக வழங்க கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் முன்வந்துள்ளார்.

இச்சிலையை செய்வதற்கு ரூ.30 இலட்சம் ஆகும் என்று மதிப்பிடப்பட் டுள்ளது.

சச்சினின் நன்கொடையை ஏற்றுக் கொள்வது குறித்து சத்யசாய் அறக்கட்டளை தனது முடிவை இன்னும் அதிகாரப் பூர்வமாக தெரிவிக்கவில்லை.

இது குறித்து எதிர்வரும் 8 அல்லது 9 ஆம் திகதி நடைபெறும் அறக்கட்டளையின் அடுத்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று தகவல்கள் கூறுகின்றன. சச்சின் சத்ய சாயிபாபாவின் தீவிர பக்தர் என்பது குறிப்பிடத்தக்கது. பாபாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த அவர் தனது குடும்பத்ினருடன் புட்டபர்த்தி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# சமாதான முயற்சிகள் தோல்வி ஏமனில் இழுபறி தொடர்கிறது

(சனா)

ஏமனில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக் கடியைத் தீர்க்க வளைகுடா கூட்டுறவு கவுன் சில் (ஜி.சி.சி) பரிந்துரைத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜனாதிபதி சலே திடீரென மறுத்து விட்டார். இதனால் சமாதான முயற்சி கள் தோல்வியில் முடிந்துள்ளன.

ஏமன் ஜனாதிபதி சலே பதவி விலகுவது குறித்து ஜி.சி.சி சில பரிந்துரைகளை முன் வைத்தது. அதன்படி 30 நாட்களில் சலே பதவி விலக வேண்டும். ஆளும்கட்சி 50 சதவீதம், எதிர்க்கட்சி 40 சதவீதம், பிறகட்சிகள் 10 சதவீதம் கொண்ட ஒரு ஆட்சியை அமை க்க வேண்டும். அதிலிருந்து 60 நாட்களில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

முதலில் இப்பரிந்துரைகளை ஜனாதிபதி சலே யும் எதிர்க்கட்சிகளும் ஏற்றுக் கொண்டன. ஆனால், மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. போராட்ட காலத்தில் மக்களைக் கொன்று குவித்தது. நாட்டின் சொத்துக்களைக் கொள் ளையடித்தது உட்பட பல்வேறு குற்றங்களுக் காக சலே விசாரிக்கப்பட வேண்டும் என்ற மக்களின் நிலையை இத்திட்டம் தந்திரமாக நிராகரித்ததை மக்கள் உணர்ந்து கொண் டனர்.

இந்நிலையில் கடந்த சனிக்கிமை ஜி.சி.சி பொதுச் செயலர் அப்துல் லத்தீப் அல் ஜய் யானி, ஏமன் தலைநகர் சனாவுக்கு வந்து ஜனாதிபதியை சந்தித்து ஒப்பந்தத்தில் கையெ ழுத்திடுவதற்காக பேசினார்.

இதுகுறித்து நான்கு சுற்றுப் பேச்சுவார்த் தைகளை சலேயுடன் அவர் நடத்தினார். ஆனால், ஒவ்வொரு சுற்றின் போதும் சலே புதிய புதிய நிபந்தனைகளைப் போட்டதால் தன் முயற்சி தோல்வியில் முடிந்ததாக ஜய் யானி தெரிவித்தார்.

இதனால் அவர் மீண்டும் ரியாத்துக்கு வெறும் கையுடன் திரும்பிச் சென்றார். இத னால் விரைவில் முடிவுக்கு வரும் என்று எதிர் பார்க்கப்பட்ட ஏமன் அரசியல் நெருக்கடி மேலும் நீடிக்கும் நிலை உருவாகியுள்ளது. (ஸ்ரீ)

## லண்டனிலுள்ள லிபியத் தூதரை வெளியேறுமாறு உத்தரவு

பிரிட்டனில் உள்ள லிபியாவின் தூது வரை 24 மணிநேரத்துக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் இந்த உத்தரவை விடுத்துள்ளார். லிபியாவின் தலைவர் டிரிபோலியில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் ஒரு கும்பலால் தாக்கப் பட்டதை அடுத்தே பிரிட்டனில் உள்ள லிபி யத்தூதுவர் ஓமர் ஜெல்பானை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேட்டோ படைகள் லிபியாவில் மேற்கொ ண்ட விமானத் தாக்குதலில் லிபிய ஜனாதி பதி கடாபியின் கடைசி மகனும் பேரப் பிள் ளைகளும் கொல்லப்பட்டனர். கடாபி இதில் அதிர்ஷ்டவசமாக உயர் தப்பியுள்ளார்.

இதையடுத்து அங்குள்ள அமெரிக்க பிரிட்டிஷ் தூதரகங்கள் மற்றும் நேட்டோ ஐக்கிய நாடு கள் அலுவலகங்கள் என்பன ஆத்திரமடைந்த லிபிய மக்களால் தாக்கப் பட்டுள்ளன. லிபியாவில் உள்ள தனது நாட்டுத் தூதரகத்தை காப்பாற்ற தேவையான நடவ டிக்கை எடுக்கப்படாமையை ஒரு பார தூர மான குற்றமாகத் தான் கருது வதா லேயே பிரிட்டனில் உள்ள லிபிய தூதுவரை வெளி யேறுமாறு கேட்டுள்ளதாக பிரிட்டிஷ் வெளியு றவு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மாலைதீவில் ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி

(மாலே)

சார்க் உறுப்பு நாடுகளில் சுற்றுலாத்துறை யில் சிறந்த நாடான மாலைதீவில் ஜனாதிபதி முகமது நஷீத் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி ஆயிரக்கணக்கான மக்கள் கிளர் ச்சியில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பெரும் கலவரம் நடந்தது.

கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் மீது பொலி ஸார் தடியடி நடத்தியும் மற்றும் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியும் கலைத்தனர். இதில் பலர் காயம் அடைந்தனர்.

மாலைதீவுகளில் ஜனாதிபதியாக முகமது நஷீத் பதவி வகித்து வருகிறார். தற்போது இவரது நிர்வாகத் பதவி விலக வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தி னம் 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் ஆர்ப் பாட்டம் நடத்தினர். இவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். ஈடுபட்டவர்கள் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்க முயன்றனர். பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கவும் அவர்கள் முயன்றனர். இவ்வாறு வன்மு றையில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட் டனர் என பொலிஸார் செய்தித் தொடர்பாளர் அகமது ஷியாம் கூறினார். இந்நாட்டின் பொருளாதாரம் சுற்றுலாத் துறையைச் சார் ந்தே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




# பாகிஸ்தானின் இறையாண்மையை மீறிச் செயற்பட்டுள்ளது அமெரிக்கா

இஸ்லாமாபாத் அருகே அப்போட்டா பாதில் அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தி யுள்ளதன் மூலம் பாகிஸ்தானின் இறை யாண் மையை அமெரிக்கா மீறியுள்ளதாக அந் நாட்டின் முன்னாள் அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா நமது பிரதேசத்துக்கு வந்து நடவடிக்கை எடுத்துள்ளமையானது நமது இறையாண்மையை மீறிய செயலாகும். அமெ ரிக்கப் படைகளின் நடவடிக்கைகள் சரியான தல்ல என்று முஷாரப் தெரிவித்தார்.

அந்நிய நாட்டின் படைகள் எல்லையைக் கடந்து பாகிஸ்தானுக்குள் வந்துள்ளன. அதை பாகிஸ்தான் மக்கள் விரும்பமாட்டார்கள். அமெரிக்கப் படைகள் எல்லையைக் கடந்து பாகிஸ்தானுக்குள் வந்திருக்கக்கூடாது என அவர் கூறினார்.

பாகிஸ்தான் அரசும் பயங்கரவாதிகளின் கோபத்துக்கு ஆளாகியுள்ளது. பயங்கரவா தத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் அரசும் இணைந்துள்ளது. பயங்கரவாத அமைப் புக் களை அழிக்க முயற்சி செய்யும் அனைத்து படை களும் ஒன்றையொன்று நம்ப வேண்டும்.


### முஷாரப் குற்றச்சாட்டு

அந்த நம்பிக்கையில் குறைபாடு ஏற்பட் டால் அது தவறானது. ஒரே எதிரியை எதிர்த் துப் போரிடுகிறோம். அதனால் இரண்டு அமைப் புகளும் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என முஷாரப் குறிப்பிட்டார்.

பின்லேடனுக்கு எதிரான நடவடிக்கை யில் பாகிஸ்தானுக்கு தகவல் தெரிவிக்கப்பட வில்லை எனக் கூறப்படுவது உண்மையா எனக் கேட்ட போது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

பின்லேடன் அந்த இடத்தில் தங்கி இருந் தாரா அல்லது வந்து போய்க்கொண்டிருந் தாரா என்பது எனக்குத் தெரியாது. எனினும் இராணுவ கட்டடத்துக்கு நெருக்கமான ஒரு வீட்டில் பின்லேடன் குடியிருந்தது அமெரி க்கா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் புலனா ய்வுத் துறைக்கு ஏற்பட்ட தோல்வி என முஷா ரப் குறிப்பிட்டார்.

பின்லேடன் கொல்லப்பட்டது பாகிஸ் தானி லும் உலகத்திலும் அமைதியை விரும்பும் மக் களுக்கு கிடைத்த வெற்றி என அவர் தெரி வித்தார். (ஸ்ரீ-2)



கத்தோலிக்க மதகுருவான மறைந்த போப் 2 ஆம் ஜான் பாலுக்கு திருநிலைப்படுத்துதல் சடங்கு வத்திக்கானில் நடைபெற்றது. இதனை முன்னிட்டு வத்திக்கானின் செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர். புனிதர் பட்டம் வழங்குவதற்கு முந்தைய சடங்குதான் திருநிலைப்படுத்துதல் என்பது குறிப்பிடத்தக்கது.



லிபியத் தலைவர் கடாபியின் குடியிருப்பு மீது நேட்டோ விமானப் படைகள் நடத்திய தாக்குதலில் முற்றிலும் சிதைந்து போன கட்டடத்தின் ஒரு பகுதியில் வெடிக்காத ஏவுகணை ஒன்று கிடப்பதைப் படத்தில் காணலாம்.

# இளவரசர் வில்லியம்- கேத் திருமண வீடியோ மூலம் அறக்கட்டளைக்கு நிதியுதவி

இங்கிலாந்து இளவரசர் வில்லியம் – கேத் மிடில்டன் திருமணம் கடந்த 29ஆம் திகதி லண்டனில் கோலாகலமாக நடந்தது. இவர்க ளின் திருமண நிகழ்ச்சிகள் தொலைக்காட் சிகளில் ஒளிபரப்பப்பட்டன.

தற்போது அவை டி.வி.டியாக மாற்றி விற்பனை செய்யப்படவுள்ளன. இங்கிலா ந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி நாடுகளில் டி. வி.டி மற்றும் கணனிகளில் பதிவிறக்கம் மூலம் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

இதிலிருந்து கிடைக்கும் நிதி முழுவதும் இள வரசர் வில்லியம் மற்றும் இளவரசர் ஹாரி அறக்கட்டளைக்கு வழங்கப்படும். இளவரசர் வில்லியம் திருமண வீடியோ ஐ.டியுனில் கிடைக்கும். மேலும் பி.பி.சி தொலைக்காட்சி யால் 2 மணிநேர வீடியோ தலா 2 ஆயிரம் ரூபாய்க்கு விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த டி.வி.டி விற்பனையில் கிடைக்கும் பணத்தின் மூலம் போரில் காயமடைந்து தவிக்கும் நூற்றுக்கணக்கான போர் வீரர்கள் மற்றும் ஊனமுற்ற இளைஞர்கள் பயனடை வார்கள். மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது.

இந்நிகழ்ச்சி தொலைக்காட்சி வரலாற்றில் மிகப்பெரிய ஒன்றாகும். எனவே வழக்கத் துக்கு மாறாக இதை மிக விரைவில் வெளியி டவுள்ளோம் என பிபிசி தொலைக்காட்சியின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

> எந்தப் பழக்கத்தையும் ஜன்னல் வழியாக தூக்கி எறிந்துவிட முடியாது. கையைப் பிடித்துப் படிப் படியாக இறக்கி அழைத்துப்போய்தான் வெளி யேற்ற வேண்டும்
> – *மார்க் ட்வெய்ன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இளம் சமூகத்தை வழிப்படுத்த வீடும் பாடசாலையும் தயாரா?

எங்களைப் பற்றிய பெருமைகளை அறிந்து கொள்வதில் நாங்கள் அக்கறையற்றவர்களாக இருந்து வருகின்றோம்.

இதன் காரணமாக எங்களின் பண்பாடு, கலாசாரம் என்பன சிதைவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

எங்களைப் பற்றி நாங்கள் பெருமையடை யாதபோது – எங்களைப் பற்றி நாங்கள் உயர் வாக நினைக்காதபோது எங்களின் உயர் பண் பாட்டை பாதுகாப்பதிலும் பின்னடைவு ஏற்படும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

அந்தவகையில் எங்களிடம் இருந்த குடும்ப உறவு, கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை, ஒழுக் கம், கட்டுப்பாடு, பெரியோரை மதித்தல் எனப் பல வாறான சிறப்புகள் பற்றி இளம் சமூகத்திற்கு எடுத்துரைப்பது அவசியம்.

வெறுமனே எங்கள் பெருமைகளை நாங் களே சுமந்துகொண்டிருப்பதால் எந்தப் பயனும் ஏற்படமாட்டா.

இப்போதெல்லாம் எங்கள் இளம் சமூகம் குறித்து வெளிவரும் தகவல்கள் எங்கள் இனத் தின் பண்பாட்டை மிக விரைவில் கபளீகரம் செய்து விடுமோ என்ற பேரச்சத்தை தந்துள்ளது.

அந்தளவிற்கு நிலைமை மோசமாகிக் கொண் டிருக்கிறது.

பாடசாலை மாணவர் பராயத்தில் ஆரம்பித்து விடும் பிறழ்வுகள் கற்றல் செயற்பாட்டை மட்டு மன்றி பாடசாலை முறைமை, ஆசிரியத்துவம் என்ற அத்தனையையும் நிலைகுலைய வைக்கும் அளவிற்கு மோசமாகிக் கொண்டிருக்கிறது.

சுடவேமாணவர்களுக்கு வீடுகளில் கிடைக்கக் கூடிய அளவுகடந்த சுதந்திரம், பண வசதி, நவீன தகவல் தொழில்நுட்பங்களின் கையாளல் என் பனவும் சேர்ந்து அவர்களின் எதிர்காலத்தை சூனியமாக்கி விடுகின்றன.

எனினும் இது தொடர்பில் கவலை கொள்ளு வதைத் தவிர வேறு எதனையும் செய்யமுடியாத பரிதாப நிலையிலேயே எங்கள் இனம் இருப்பதை உணரமுடிகின்றது.

உண்மையில் எமது இனத்தின் பண்பாடு, கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனில் அது பெற்றோர்கள் மற்றும் பாடசாலை ஆகிய இரு பெரும் சக்திகளால் மட்டுமே முடியும்.

இருந்தும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைக ளைக் கட்டுப்படுத்துவதில் வல்லமை அற்றவர் களாக இருக்கின்றனர்.

எங்கள் பிள்ளைகளை நீங்கள்தான் திருத்த வேண்டும் என இரகசியமாக ஆசிரியரிடம் மன் றாடும் பெற்றோர்களையே சமகாலத்தில் காண முடிகின்றது.

ஆசிரியர்களோ புதிய சட்டதிட்டங்களும்– உரிமை பிரச்சினைகளும் எண்ணற்ற அறிக்கை களின் குழப்பத்திற்குள்ளும் அகப்பட்டு எதுவும் செய்யமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

இவற்றை மீறி மாணவர்களை அதட்ட முற் பட்டால் எல்லாம் போச்சு என்ற பயம் வேறு.

ஆக, நடப்பது நடந்து முடியட்டும். ஓய்வு காலம் வரை சமாளிப்பம் என்ற மனநிலையே ஆசிரியரி டம் உள்ளது. நிலைமை இதுவாயின் எப்படி இளம் சமூகத்தை வழிப்படுத்துவது ...

பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒன்றி ணைந்து தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளப்படுத்துவது எனத் திடசங்கற்பம் பூண்டால் அன்றி வேறு வழி ஏதுமில்லை.

# இலங்கை விவகாரங்களைக் கையாண்ட இந்திய உயரதிகாரிக்கு இடமாற்றம்

(புதுடில்லி)

இலங்கை விவகாரங்களைக் கை யாண்டு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரி திருமூர்த்தி வேறு பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவின் உத்தரவின் பேரி லேயே இம்மாற்றம் மேற்கொள்ளப் பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் இந்திய வெளிவிவகார அமைச்சில் பிராந்திய விவகாரங்க ளைக் கவனிக்கும் உயரதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளதாகவும் இச் செய்திகள் தெரிவிக் கின்றன.

இதனடிப்படையில் இலங்கை, பங் களாதேஷ், மாலைதீவு ஆகிய நாடு களின் விவகாரங்களை இதுவரை கை யாண்டு வந்த உயரதிகாரி திருமூர்த்தி வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கைக்கு பல தடவை விஜயங்களை மேற்கொண்டி ருந்தவரும் இலங்கை விவகாரங்களில் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த வருமான திருமூர்த்தியின் இடத்திற்கு ஹர்ஸ்வர்தன் சிங்லா நியமிக்கப்பட்டு ள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

## திருக்கேதீஸ்வர மகோற்சவம்

திருக்கேதீச்சரத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி க்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமா கவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை பாலாவி திருக்குளத்தில் தீர்த் தத் திருவிழாவும் மாலை கொடியிறக் கமும் நடைபெறும். (ஸ்ரீ–2)

## முகாம்களிலுள்ள மக்களுக்கான நாளாந்த கொடுப்பனவை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக் கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப் படும் மக்களுக்கு வழங்கப்படுகின்ற நாளாந்தக் கொடுப்பனவை அதிகரிப் பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது வழங்கப்படும் கொடுப் பனவு போதுமானதாக இல்லை என்ப தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச் சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள் ளார்.

நாட்டின் சில மாவட்டங்களில் நில வும் கடும் மழை காரணமாகப் பாதிக் கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கு மாறு மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச் சர் தெரிவித்தார். (ஸ்ரீ–2)

## கஞ்சா வைத்திருந்த மூவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கஞ்சாவைத் தம்வசம் வைத்திருந்த குற்றத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மூவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரையண்டிய பகுதியில் கஞ் சாவை வைத்திருந்த குற்றத்திற்காக யாழ்ப்பாணம் பொலிஸார் மூவரைக் கடந்த மாதம் 29ஆம் திகதி கைது செய்தனர்.

மேற்படி நபர்கள் நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த யாழ் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா ஒவ்வொ ருவருக்கும் 12 ஆயிரத்து 500 ரூபா, 7 ஆயிரத்து 500ரூபா, 5 ஆயிரம் ரூபா என அபராதம் விதித்து தீர்ப்பளி த்தார்.

5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்ட நபர் பணத்தை செலுத்த தவறி யதால் ஒரு மாத காலம் சாதாரண சிறை வைக்கும் படியும் தீர்ப்பளித்தார்.

ஏனைய இருவரும் மன்றில் பண த்தை செலுத்தியமையால் விடுவிக்கப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ–6)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

மு/ மாங்குளம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட் டம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு பழைய மாண வர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளனர். (ஸ்ரீ–2)

## அனர்த்த முகாமைத்துவ தேசிய கவுன்சிலின் ஐந்தாவது மாநாடு

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவ தேசிய கவுன்சிலின் ஐந்தாவது மாநாடு ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண, அமைச்சர்களான மஹிந்தானந்த அமரவீர, நிமால் சிறிபால டி சில்வா, ஜோன் செனவிரட்ண, சந்திரசிறி கஜதீர, பவித்ரா வன்னியாராச்சி ஆகியோர் உட்பட மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (ஸ்ரீ–2)

## கிளிநொச்சி வலய ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

(பூநகரி)

கிளிநொச்சி வலயத்திலுள்ள கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை கோட்டங் களை சேர்ந்த பாடசாலைகளில் ஆங் கில பாடத்தை கற்பிக்கும் 40 ஆசிரியர் களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 7 திகதி வரை கிளிநொச்சி செ்ன்.திரேசா மகளிர் கல்லூரி மண்ட பத்தில் நடை பெற்று வருகிறது.

மத்திய அமைச்சின் ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலோடு கிளி நொச்சி வலய கல்விப் பணிமனையி னரின் ஒழுங்குபடுத்தலுடன் பரந்த ஆசிரிய மத்திய நிலையத்தால் இப் பயிற்சி நடத் தப்படுகிறது.

இந்தியாவில் ஐதராபாத்தில் விசேட பயிற்சி பெற்ற வளவாளர்களால் இப் பயிற்சி நடத்தப்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ–3–84)

## பால்மா விலை அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் பால்மாக் களின் விலை நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ள தாக உள்நாட்டு வர்த்தக மற்றும் கூட்டு றவு அமைச்சு தெரிவித்தது.

இதற்கிணங்க 400 கிராம் பால்மா பக்கெற்றின் விலை 20 ரூபாயாலும் ஒரு கிலோ பால்மா பக்கெற்றின் விலை 49 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ள தாக வர்த்தக மற்றும் நுகர்வோர் அமை ச்சு குறிப்பிட்டது. (ச–5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



எல்லாவற்றிலும் இறைவனை இணைத்துச் செயல் புரியுங்கள் என்று வேதாந்தம் சொல்கிறது. வாழ்க்கையைத் தெய்வீகமாக்கி, தெய்வமாக்கி, இடைவிடாமல் வேலை செய் யுங்கள். நாம் செய்ய வேண்டியதும் இவ்வளவுதான் என் பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். எங்கும் இறைவன் இருக்கிறார். அவ ரைத்தேடி நாம் எங்கே போவது? ஒவ்வொரு செயலிலும் ஒவ்வோர் எண் ணத்திலும் ஒவ்வோர் உணர்ச்சியிலும் அவர் ஏற்கனவே உள்ளார். இதை உணர்ந்து செயல்புரிய வேண்டும். அது ஒன்றுதான் வழி. வேறு வழியே இல்லை. அப்போதுதான் நமது கர்மபலன்கள் நம்மைக் கட்டுப்படுத்தாது.

போலி ஆசைகள்தான் நமது எல்லாத் தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணம் என்பதைப் பார்த்தோம். அந்த ஆசைகளையே இறைவனின்மூலம் தெய்வீகமாக்குங்கள், தூய்மைப்படுத்துங்கள். அதன்பின் அவை துன்பத் தையோ, தீமையையோ கொண்டுவராது. இந்த இரகசியத்தை அறியாதவர் களுக்கு அதை அறிந்து கொள்ளும் வரை உலக வாழ்க்கையே நரகமாகத்தான் இருக்கும். தங்களுக்கு உள்ளும், தங்களைச் சுற்றியும், எல்லா இடங்களிலும் எல்லையற்ற ஆனந்தச் சுரங்கம் இருக்கிறது என்பது பலருக்குத் தெரியா தது. அவர்கள் இன்னும் அதைக் கண்டுபிடிக்கவில்லை. நரக வாழ்க்கை என்பது என்ன? அறியாமைதான் நரகம் என்கிறது வேதாந்தம்.

# மேற்குலகம் தீர்மானித்தால் இலங்கை மீது நடவடிக்கை மேற்கொண்டே தீரும்!

**இலங்கை மீது நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மேற்குலகம் தீர்மானித்தால் அவர்கள் அதனை நிறைவேற்றியே முடிப்பார்கள் என்பதற்கு லிபிய, சிரிய விவகாரங்கள் நல்ல உதாரணங்களாகும் என ஆங்கில ஊடகமொன்று தனது அரசியல் பத்தியில் தெரிவித்துள்ளது.**

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளைத் தமக்கு ஆதரவாகத் திருப்பும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

47 அங்கத்தவர்களைக் கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தற்போது தாய்லாந்து தலைமை தாங்குகின்றது. ஆனால், மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளை ஏற்கனவே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை தான் வரவேற்பதாக கடந்த 26ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். நிபுணர் குழுவின் அறிக்கையில் போர் எவ்வாறு நிறைவடைந்துள்ளது என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் அவசியமானது என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதேவேளை, லிபிய விவகாரம் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கடந்த வெள்ளிக்கிழமை சிரியா மீது கொண்டுவரப்பட்ட தீர்மானத்திலும் மேற்குலகம் எதிர்பாராத வெற்றியை அடைந்துள்ளது. எனவே, இலங்கை மீதான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென மேற்குலகம் தீர்மானித்தால் அவர்கள் அதனை நிறைவேற்றியே முடிப்பார்கள் என்பதற்கு லிபிய, சிரிய விவகாரங்கள் உதாரணங்களாகும்.

சிரியாவுக்கு எதிரான தீர்மானத்தில் 26 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. சீனா, கியூபா, ஈகுடோர், காபோன், மலேசியா, மொறிசியஸ், பாகிஸ்தான், ரஷ்யா, பங்களாதேசம் ஆகிய 9 நாடுகளே எதிராக வாக்களித்திருந்தன.

ஏழு நாடுகள் வாக்களிக்கவில்லை. நான்கு நாடுகள் பிரசன்னமாகியிருக்கவில்லை. இந்நிலையில்தான் சிரியா மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிரியாவுக்கு எதிராக அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கையும் காத்திரமானதாகவே அமைந்திருந்தது. எனினும் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் ஆதரவுகளைப் பெறுவதற்கு இலங்கை கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது.

இந்தியாவிற்கு எதிர்வரும் 16ஆம் திகதி செல்லவுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்திக்கத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சந்திப்பில் நிபுணர் குழுவின் அறிக் கைக்கு இந்தியாவின் ஆதரவைக் கோருவதற்கும் திட்டமிட்டுள்ளார்.

அதன் பின்னர், இந்தோனேசியாவிற்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள ஜி.எல். பீரிஸ் அங்கு அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார் எனவும் அதன் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## திருமலையில் விமானப்படை வீரரொருவர் தற்கொலை

(கொழும்பு)

திருகோணமலை மொறவெவ விமானப் படைத் தளத்தில் கடமையாற்றி வந்த விமானப்படை வீரர் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கண்டிப் பகுதியைச் சேர்ந்த பி.கே.சமிந்த குமார என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

கடமையிலிருந்து இவர் தனது காதலியுடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவர் பயன்படுத்திய தொலைபேசியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவரின் சடலத்தை பார்வையிட்ட திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சடலத்தை அவரின் உறவினர்கள் பார்வையிட்ட பின்னர் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

திருகோணமலை பொது வைத்திசாலையில் இவரது சடலம் தற்போது வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மொறவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## உலகம் முழுவதும் உள்ள அமெரிக்க தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

உலகெங்கும் அமெரிக்கத் தூதரகங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உயர் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட நிலையில் அமெரிக்கத் தூதரகங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, லிபிய தலைவர் கேணல் கடாபியின் மகன் நேட்டோ விமானத் தாக்குதலில் பலியானதையடுத்து லிபியத் தலைநகர் டிரிபோலியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடாபிக்கு ஆதரவான படைகள் அமெரிக்க, பிரித்தானிய, இத்தாலிய தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் அமெரிக்க தூதரக கட்டடமொன்று தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் மற்றும் வெளிநாடுகளில் தங்கியுள்ள அமெரிக்கப் பிரஜைகளுக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்று காலை எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் சித்திரை மாத ஞானச்சுடர் வெளிவந்துள்ளது.

இம்மலர் யாழ்ப்பாணத்தில் சிறப்பான முருகன் ஆலயங்கள், சிறுவர் கதைகள், திருவிளையாடல் போன்ற பல அம்சங்களுடன் வெளியாகியுள்ளது. (ஸ்ரீ-2)

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் தமிழ் மக்கள் மௌனம் காக்கக்கூடாது

### கிழக்கு மாகாண உறுப்பினர் மாசிலாமணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா. அறிக்கை தொடர்பில் தமிழ் மக்கள் மௌனம் காக்காது அது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கையெடுக்கும்வரை ஓயாமல் செயற்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் தமது கட்சி மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ள போதிலும் அது தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உறுப்பினர் என்ற வகையில் ஐ.நா. அறிக்கையைத் தான் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. அறிக்கை தொடர்பில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் மேற்கொண்ட அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை மட்டக்களப்பு தமிழ் மக்களின் ஒட்டுமொத்த போராட்டமாகக் கருத முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலையில் இந்தியாவின் பங்கும் முக்கியமானது எனத் தெரிவித்த அவர் இந்தப் போர்க்குற்ற விசாரணையில் இந்தியாவையும் உட்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## "சொற்பொழிவு"

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதியான் ஆலயத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு "ஆன்ம ஈடேற்றம்" தொடர்பான சொற்பொழிவொன்றினை யாழ். சின்மய நிறுவனத்தின் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்யா சுவாமி நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-2)

## சூரிய மண்டலத்திலுள்ள 4 கிரகங்களை தெளிவாக காண்பதற்கான வாய்ப்பு

(கொழும்பு)

சூரிய மண்டலத்திலுள்ள நான்கு கிரகங்களைத் தெளிவாகக் காணும் வாய்ப்பு மக்களுக்குக் கிட்டியுள்ளது.

செவ்வாய், வியாழன், சனி மற்றும் புதன் ஆகிய கிரகங்கள் தற்போது புவியை அண்மித்து நிலைகொண்டுள்ளதால் அவற்றைத் தெளிவாகக் காணமுடியும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சந்தன ஜயரத்ன கூறியுள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை அதிகாலை 5 மணியளவில் கிழக்கு வான்பரப்பில் இந்த நான்கு கிரகங்களும் தென்படும்.

எதிர்வரும் 7ஆம் திகதிவரை செவ்வாய், வியாழன், சனி மற்றும் புதன் ஆகிய கிரகங்கள் புவிக்கு 5 பாகையில் நிலைகொள்வதால் அந்தக் கிரகங்களை மேலும் தெளிவாகக் காணமுடியும் என கலாநிதி சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நான்கு கிரகங்களை ஒரே தடவையில் மிகவும் தெளிவாகக் காண்பதற்கான வாய்ப்பு கிடைக்கின்றமை மிகவும் அரிதானதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கையில் முதலீடு செய்ய அமெ. முதலீட்டாளர்கள் ஆர்வம்

(கொழும்பு)

அமெரிக்க மற்றும் இலங்கை வர்த்தக அமைப்பினால் கடந்த 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட சந்திப்புகளையடுத்து பல அமெரிக்க முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முன்னோடியாக கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல வர்த்தகர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

இந்த விஜயத்தின் மூலம் இலங்கையின் வர்த்தக கள நிலையை பிரதிநிதிகள் நன்கு புரிந்துகொண்டதாக கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது அமைச்சர் மத்திய மற்றும் தெற்கு ஆசியாவிற்கான அமெரிக்க உதவிச் செயலாளர் மைக்கல் டெலனியையும் சந்தித்து ஆக்கபூர்வமான வர்த்தக நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார். (ஸ்ரீ-2)

# யார் இந்த ஒசாமா?

உசாமா பின் முகமது உபின் அவாத் பின் லாடின் - இது தான் ஒசாமா பின் லேடனின் முழுப் பெயர்.சவுதி அரேபியாவின் ரியாதம் நகரில் 1957 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி பிறந்தவர்.

சவுதியைச் சேர்ந்த பின்லாடின் குரூப் நிறுவனம் உலகப் புகழ் பெற்றது. உலகின் பல நாடுகளிலும் எண்ணெய் வர்த்தகம் மற்றும் கட்டுமான தொழில் செய்து வருகிறது. ஆண்டுக்கு சுமார் ரூ.22 ஆயிரம் கோடிக்கு வர்த்தகம் செய்யும் பிரமாண்ட நிறுவனம். சவுதி அரச குடும்பத்துடன் நெருங்கிய நட்புக் கொண்ட நிறுவனம். இக்குடும்பத்தில் பிறந்தவர் பின்லேடன். இந்த குடும்பத்தில் பிரபல தொழிலதிபராக விளங்கிய முகமது பின்லேடனுக்கு 10 ஆவது மனைவி ஹமீதா அல் அட்டாசுக்கும் மகனாகப் பிறந்தார். அட்டாசுக்கு மொத்தம் 52 பிள்ளைகள். பின்லேடன் 17 ஆவது. இவர் பிறந்த சிறிது காலத்திலேயே அம்மா விவாகரத்து செய்துவிட்டு முகமது அல் அட்டாஸ் என்பவரைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு 4 குழந்தைகள். அவர்களுடனேயே வளர்ந்தார் பின்லேடன்.

ஜெட்டா நகரில் உள்ள அல் தாகர் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தார். கிங் அப்துல் அஜீஸ் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரம் மற்றும் வர்த்தக முகாமைத்துவம் படித்தார்.குடிசார் இயந்திரவியல் முடித்ததாவும் சிலர் கூறுகின்றனர்.

படிக்கும் காலத்திலேயே மதம் தொடர்பான கருத்துகளில் பின்லேடன் அதிக ஆர்வம் காட்டிவந்தார். புனிதப்போர் தொடர்பாக கூறப்பட்டுள்ள கருத்துக்களை நிறையப் படித்துவந்தார்.

1974 இல் திருமணம். மனைவி பெயர் நஜ்வா கானம். அப்போது பின்லேடனுக்கு வயது 17.2002 ஆம் அண்டு கணக்குப்படி அவருக்கு மொத்தம் 4 மனைவிகள். 26 குழந்தைகள்.


பில்லேடனின் கல்லூரிப் பேராசிரியர் அப்துல்லா அஜாம் என்பவர் பாகிஸ்தானின் பெஷாபர் நகரில் தங்கியிருந்தார். அந்த நேரத்தில் ஆப்கான் மீது சோவியத் யூனியன் 1979 இல் கடும் தாக்குதல் நடத்தியது. அவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்திய முஜாகிதீன் கொரில்லா படையினருக்கு அஜாம் ஆதரவு அளித்தார்.




இளம் வயதில் குடும்பத்தினருடன்.. வட்டமிடப்பட்டிருப்பது பின்லேடன்.



கராத்தே பயிற்சி செய்யும் சிறுவனாக பின்லேடன்.



கைபர் கணவாய் இந்துக்குஷ் மலைத் தொடர் பகுதி வழியாக வெளிநாடுகளில் இருந்து படையினரை இறக்கி சோவியத்துக்கு எதிரான தாக்குதலை அஜாம் தீவிரப் படுத்தினார். கல்லூரிப் படிப்பை முடித்த பின்லேடன் தனது ஆசிரியருக்கு ஆதரவாக இறங்கினார். இதற்காக கல்லூரி படிப்பை 3 ஆம் அண்டிலேயே பின்லேடன் விட்டுவிட்டு வந்ததாக கூறப்படுகிறது. பிறகு சிறிதுகாலம் பெஷாவரிலேயே பின்லேடனும் தங்கினார்.

பணம் படைத்த இஸ்லாமிய நாடுகளில் இருந்து பணம், ஆயுதங்கள் பெற்று புனிதப் போரில் ஈடுபட்டவர்களுக்குக் கொடுப்பதற்காக மக்தாப் அல் கடாமத் என்ற அமைப்பை அஜாமும் பின்லேடனும் 1984 இல் தொடங்கினர். இதற்கிடையில் சோவியத் தாக்குதல்கள் நின்றபின் பின்லேடன் சவுதி திரும்பினார். குடும்பத்தின் கட்டுமானத் தொழிலை கவனிக்க ஆரம்பித்தார். ஆனாலும் முஜாகிதீன்களுடனான தொடர்பு நின்றுவிடவில்லை. அவர்களுக்கு நிதி திரட்டும் வேலையையும் தீவிரமாகக் கவனித்தார்.

மதச் சட்டங்கள் கடுமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதை மீறுபவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட பின்லேடன் வேறு சிலருடன் சேர்ந்து 1988-89 இல் அல் கய்தா அமைப்பை தொடங்கினார். அரசு சட்டங்களுக்கு எதிராக செயல்படுவதாக கூறி சவுதி அரேபிய அரசு அவருக்கு தடை விதித்தது. அவரது சவுதி குடியுரிமை ரத்துச் செய்யப்பட்டது. அவருடன் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று பின்லாடின் குடும்பத்தினர் அறிவித்தனர். சூடானில் அடைக்கலம் புகுந்தார்.

அமெரிக்காவிலும் நைரோபி, கென்யா, தான்சானியா உள்ளிட்ட பல இடங்களில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களிலும் குண்டுவெடிப்பை நடத்தியது அல்கய்தா. அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாக அவரை நாடுகடத்துவதாக சூடான் 1996 இல் அறிவித்தது. மனைவிகள், 10 குழந்தைகளுடன் அங்கிருந்து புறப்பட்டார் பின்லேடன். ஆப்கானிஸ்தானில் தஞ்சம் அடைந்த அவர் அமெரிக்காவுக்கு எதிராக புனிதப்போர் அறிவித்தார்.



6 வயது பின்லேடன்.

பலஸ்தீனத்துக்குஎதிராகவும் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் அமெரிக்கா செயல்படக்கூடாது. இஸ்லாமிய நாடுகளில் நிறுத்தியிருக்கும் ராணுவப் படைகளை அமெரிக்கா உடனே வாபஸ்பெறவேண்டும். அப்படிசெய்யாதவரை அமெரிக்க இராணுவத்தினரையும் அந்நாட்டினரையும் கொன்று குவிக்க வேண்டும் என்று அல்கைதா இயக்கம் முதலில் 1996 ஆம் ஆண்டும் பிறகு 1998 ஆம் ஆண்டும் பத்வா மத உத்தரவு பிறப்பித்தது.

குண்டு வெடிப்புகளில் அவரைக் குற்றவாளியாக அறிவித்தது அமெரிக்கா. உலகையே உலுக்கிய 2001 செப்ரெம்பர் 11 சம்பவத்திலும் முக்கிய குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் 10 ஆண்டு தேடுதல் வேட்டைக்குப்பிறகுதற்போது சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார் பின்லேடன்.

# உலகக் கிண்ண கிரிக்கெட் பரிசுப் போட்டி முடிவுகள்

நடந்து முடிந்த பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு உங்கள் வலம்புரி பரிசுப்போட்டி நடாத்தியது. தினம் ஒரு பரிசு என்ற மாபெரும் பரிசுப்போட்டியில் வெற்றிபெற்றோர் மற்றும் சரியான விடையை எழுதிய வாசகர்களின் விபரங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

இப் பரிசுப் போட்டிக்கு பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் தமது பங்களிப்பை வழங்கி ஆதரவையளித்தனர். அத்துடன் சரியான விடையை எழுதி ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை சமர்ப்பித்தனர். இவ்வாறு ஆதரவு வழங்கிய வாசகர்களாகிய உங்களுக்கு வலம்புரிக் குடும்பம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் இப்பரிசுப் போட்டிகளை நடாத்துவதற்கு அனுசரணை வழங்கிய ஒலிம்பியா ஸ்போட்ஸ், M.C.S, அல்டி எலக்ரோனிக், நவகலா, Suntel, Arrul Global ஆகிய நிறுவனங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## தினம் ஒரு பரிசு – 38

***பத்தாவது உலகக்கிண்ணத் தொடருடன் ஓய்வுபெறும் இலங்கை வீரர் யார்?***

**விடை :- முத்தையா முரளிதரன்**

***பரிசு பெறுபவர்கள் :-***

1) ந.லோஜிதன் (கரவெட்டி மத்தி, கரவெட்டி)
2) ச.சஜீவன் (கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்)
3) இ.எ.துரைரெட்ணம் (கதீற்றல் லேன், யாழ்ப்பாணம்)
4) எஸ்.கே.பலேகுமார் (தங்காலய வீதி, தும்பளை, பருத்தித்துறை)
5) செ.மதுஜா(பிரம்படி வீதி, கொக்குவில்)

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

ந.துஷ்யந்தி (அல்வாய் கிழக்கு, அல்வாய்), எஸ்.நிருஷன் (வட்டுக் கோட்டை வீதி, கொக்குவில்), தா.பேரின்பநாதன் (டேவிட் றோட், யாழ்ப்பாணம்), ஆர்.ராம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), கு.சிந்துஜா (நவாலி வடக்கு, மானிப்பாய்), றெ.அனோஜ் (அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்), தி.மசிய கொஞ்சலீனா (யூலன் வீதி, அச்செழு), கு.சுவர்ணவிழி (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), எஸ்.யசோக்குமார் (மந்துவில் கிழக்கு), து.சுகந்தன் (மாதகல் மேற்கு, மாதகல்), கெ.ரஞ்சித் விஜயகுமார் (ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்), கு.கிருசாந்தி (பத்திரகாளி கோவிலடி, வண்ணார் பண்ணை), எஸ்.நிறோஜன் (மனோகரா, அல்வாய்), மு.சிவனு (மருதநகர் வைரவர், கிளிநொச்சி), அ.ஞானப்பிரகாசம் (காலானை, பத்தமேனி), தி.தவலக்ஷன் (கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு), ஏ.ரதி இசாவெல் (கோவில் வீதி, யாழ்ப்பாணம்), மா.வியேக்கா (செட்டியவூர், தொண்டைமானாறு), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோயில், இணுவில்), செ.தனுஷன் (உரும்பிராய் வடக்கு, இந்துக்கல்லூரி லேன்), வி.சர்மினி (சோடக்கன், இளவாலை), வ.பிரபாகர் (மணல்தறை லேன், கந்தர் மடம்), க.கவிஷ்மிகா (ஏழாலை மேற்கு, சுன்னாகம்), க.திரன் மிகா (ஏழாலை மேற்கு, சுன்னாகம்), என்.மாதன்கி (பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை, நல்லூர்), ச.தர்சிகா (பிளாக் றோட், சங்கானை), ப.பிரபாங்கனி (சோமராந் தோட்டம், உடுவில் கிழக்கு), கெ.மதுசன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்), வி.கஜமுகன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்), ம.மதிவண்ணன் (கற்பக்குனை, கந்தரோடை), த.பேரின் பராசா (கச்சேரி, கிளிநொச்சி), சி.மதுசன் (நாகலிங்க சுவாமி வீதி, சங்கானை), வ.சசிகரன் (கரணவாய் மேற்கு, கரவெட்டி), வி.நிலாயினி (ஏழாலை மேற்கு, ஏழாலை), ச.பிரபாலினி (செம்பாடு, பொலிகண்டி மேற்கு), கெ.கனேசமூர்த்தி (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்), இ.விஜிதா (வண்ணாங்கேணி வடக்கு, பளை), ச.ஜெறோமியன் (பேரின்பநாயகம் வீதி, கச்சேரி), ஏ.யூலிதா (சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு), சி.சிவகுமார் (அம்பனை கிழக்கு, பருத்தித்துறை), க.கஜனன் (கோவிலாக் கண்டி சந்தி, கைதடி), க.மேகலா (அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை), தே.தேவிகா (மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு), கெ.கபிலன் (நீர்வேலி வடக்கு, நீர்வேலி), கு.குலமகள் (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்), மு.தர்மியா (கல்லூரி வீதி, சங்கத்தானை), சி.செந்தில்நாதன் (ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு), வ.பாஸ்கரன் (கரணவாய் கிழக்கு, கரவெட்டி), மோ.தமிழீசன் (5ம் வட்டாரம், நயினாதீவு), றூ.கம்சிகாந் (நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்), தி.மணிமோகன் (பன்னாலை, தெல்லிப்பழை), அ.நிதர்ஷன் (கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்), ந.தர்மேந்திரன் (9ம் வட்டாரம், புங்குடுதீவு), டே.மரினா (கடற்கரை வீதி, நாச்சிக்குடா), கெ.செல்வராணி (புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்), நா.செந்தமிழ்ச் செல்வன் (குப்பிழான் தெற்கு, ஏழாலை), நா.சுந்தரலிங்கம் (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்), மு.ஜெயந்தி (பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி)

## தினம் ஒரு பரிசு – 39

***பத்தாவது உலகக்கிண்ணத் தொடரில் ஒரே போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த அணிகள் எவை?***

**விடை :- இந்தியா, இங்கிலாந்து**

***பரிசு பெறுபவர்கள் :-***

1) மு.தர்மியா (கல்லூரி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி)
2) க.கஜனன் (கோவிலாக்கண்டி சந்தி, கைதடி)
3) ம.அனுஷன் (குடத்தனை வடக்கு, குடத்தனை)
4) அ.டெனிசன் (கோண்டாவில் கிழக்கு)
5) ம.பிரதீஸ்வரன் (வேளாதோப்பு யாழ்ப்பாணம்)

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

எஸ்.திருமகள் (புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டை), கெ.கபிலன் (நீர்வேலி வடக்கு, நீர்வேலி), செ.மதுஜா (பிரம்படி வீதி, கொக்குவில்), ரி.கோகிலதாஸ் (பழைய ஆஸ்பத்திரி வீதி, வட்டு தென்மேற்கு), ச.பிரபாலினி (செம்பாடு, பொலிகண்டி மேற்கு), சா.ஜினேஸ் (திருநகர் வடக்கு, கிளிநொச்சி), மு.சௌமியா (கல்லூரி வீதி, சங்கத்தானை), ந.தர்மேந்திரன் (9ம் வட்டாரம், புங்குடுதீவு), மு.கஜந்தன் (வட்டுகிழக்கு, சித்தன்கேணி), ப.சசிதரன் (5ம் வட்டாரம், நயினாதீவு), எஸ்.ஜெ.சாமிலி (மவுண்காா்மல் வீதி, குருநகர்), செ.சாந்தினிதேவி (ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு), வ.பிரபாகர் (மணல்தறை லேன், கந்தர்மடம்), மனோஜ் (யாழ்ப்பாணம்), சு.பால்ராஜ் (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்), அ.அல்பேட் (10ம் வட்டாரம், நெடுந்தீவு), யோ.பிறேமதாஸ் (மட்டுவில்மேற்கு), றூ.கம்சிகாந் (நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்), வ.அகில்வனா (புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்), இ.ஶ்ரீகஜன் (புனிதஅந்தோனியார்வீதி, சுன்னாகம்), க.ஜனகன் (அல்வாய் தெற்கு, அல்வாய்), சி.சிவேந்திரன் (முல்லை வீதி, பரந்தன்), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோயிலடி வீதி, இணுவில் கிழக்கு), எஸ்.நிறோயன் (மனோகரா, அல்வாய்), ஆர்.ராம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்)

முற்றும்


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
அக்ஷய திருதியையில் (06.05.2011 வெள்ளிக்கிழமை) தங்க நகை வாங்குபவர்களுக்கு
சகல ஐஸ்வரிய சிறப்புகள் உண்டாகும்.
யாரேனும் சங்கானை மாநகரத்தில் நகை வாங்க வந்தால் அவர்களின் நாவில் பேசப்படுவது,
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
அன்றைய தினம் தங்க நகைகள் வாங்குபவர்களுக்கு
தங்க நாணயங்கள், விஷேட அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்படும்.

ராசியான நகை மாடத்திற்கு வாரீர் வாரீர்
சகல ஐஸ்வரியங்கள் பெற்றிடுவீர்
இல-10. பஸ்நிலையம் முன்பாக, சங்கானை. தொலைபேசி இல: 021 321 2399

# பின்லேடன்...

தாக்குதலில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகினர்.

உலக வல்லரசான அமெரிக்காவுக்கு அல்கெய்தாவின் இந்தத்தாக்குதல் கடும் அதிர்ச்சியையளித்தது. இதையடுத்து அல் கெய்தா அமைப்பை கூண்டோடு அழிக்க அமெரிக்கா முடிபு செய்தது.

தாக்குதல் வழக்கில் முக்கிய குற்றவாளியாக பின்லேடன் அறிவிக்கப்பட்டார். தீவிர வாதத்திற்கு எதிரான நடவடிக்கையை அப்போதைய அமெரிக்க அதிபர் புஷ் முடுக்கிவிட்டார்.

இதற்கிடையே ஆபிரிக்காவில் உள்ள இரண்டு அமெரிக்க தூதரங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஏமனில் அமெரிக்க போர்க் கப்பல் யூ.எஸ்.எஸ்.கோல் மீது நடந்த தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து பின்லேடனை வேட்டையாட அமெரிக்கா களத்தில் இறங்கியது. தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஆப்கானிஸ்தான் பகுதியில் பின்லேடன் தங்கியிருப்பதாக தகவல் கிடைத்தும் ஆப்கானிஸ்தான்மீது போர்த் தொடுக்க அமெரிக்கா முடிபு செய்தது.

அதன்படி நேட்டோ படையுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் மீது 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி தாக்குதல் நடத்தியது அமெரிக்கா.

கடந்த 10 ஆண்டுகளாக இந்தப்போர் நீடித்து வருகிறது. இதில் தீவிரவாதிகள், அப்பாவிமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். நேட்டோ படையிலும் ஏராளமான வீரர்கள் உயிரிழந்தனர்.

ஆனால் பின்லேடன் மட்டும் சிக்கவில்லை. அதேநேரத்தில் தலிபான் தீவிரவாதிகளும் பாகிஸ்தானின் வசிரிஸ்தான் பகுதியில் மறைந்து கொண்டு ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படையினர் மீது தாக்குதல் நடத்தி வந்தனர்.

இதையடுத்து ஆளில்லா போர் விமானங்கள் (ட்ரோன்) மூலம் பாகிஸ்தான் பகுதியில் அமெரிக்கப்படை குண்டு வீசியது. இதில் முக்கிய தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர்.

தங்கள் பகுதியில் அமெரிக்கப்படை அத்துமீறி தாக்குதல் நடத்துவதற்கு பாகிஸ்தான் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. ஏராளமான நிதி உதவி, ஆயுதங்களை கொடுத்து அந் நாட்டை சரிகட்டிய அமெரிக்கா ட்ரோன் தாக்குதலை தொடர்ந்து நடத்தி வந்தது.

ஆப்கான் எல்லை அருகே உள்ள பாகிஸ்தான் மலைப்பகுதியில் பின்லேடன் மறைந்து வாழ்ந்தார். திடீர் திடீர் என தொலைக்காட்சியில் தோன்றி அமெரிக்காவுக்கும் நேட்டோ படைகளுக்கும் எச்சரிக்கை விடுத்து வந்தார்.

ஆனால் பின்லேடன் தங்கள் பகுதியில் இல்லை என பாகிஸ்தான் தொடர்ந்து மறுத்து வந்தது. அதை நம்ப மறுத்த அமெரிக்கா தொடர்ந்து தேடுதல் வேட்டையை நடத்தியது.

இந் நிலையில் இஸ்லாமாபாத் அருகே ஒரு வீட்டில் பின்லேடன் மறைந்திருப்பதாக ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க இராணுவத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதை அதிபர் ஒபாமாவிடம் அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

அதிரடித்தாக்குதல் நடத்தி பின்லேடனை கொல்ல உத்தரவிட்டார் ஒபாமா. இதையடுத்து பின்லேடன் பதுங்கியிருந்த பகுதியில் அமெரிக்க வீரர்கள் தீவிர தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த தாக்குதலில் பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடலை இராணுவத்தினர் கைப்பற்றினர். இந்தத் தகவல்களை அமெரிக்க அதிபர் ஒபாமா வாஷிங்டனில் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தார். (ச-5)

## மரண அறிவித்தல்கள்

### தியாகராசா திலகவதி

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா திலகவதி(திலகம்) 30.04.2011 (சனிக்கிழமை) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான இராசசுந்தரம் ஞானநாயகம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் அமரர் தியாகராசாவின் அன்பு மனைவியும், வேதநாயகி (வேதம்), ஞானாம்பிகை (ஞானம்), சகுந்தலாதேவி (மல்லி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கி.நித்தியகல்யாணி (கனடா), சி.மைதிலி(பிரான்ஸ்), ஜெ.இந்துமதி (பிரான்ஸ்), மு.கமலவேணி(ஆசிரியர், யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்.) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபநேசன் (கனடா), சிவகுமார் (பிரான்ஸ்), அமரர் ஜெயதேவிபாலன் மற்றும் முரளிமோகன் (அதிபர், யா/உடுவில் அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், மிதுஜனா, தரங்கிதா, கீர்த்தனா, மாதுர்யா, மிருணாளன், மாதுளா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தில்லை வாசம்
ஏழாலை மேற்கு. ஏழாலை

தகவல்:
செ.முரளிமோகன் (மருமகன்)

(4836)

### திருமதி கந்தசாமி இராசமலர்



வட்டு. மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப் பழை வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி இராசமலர் (மைனா) நேற்று (02.05.2011) காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கந்தசாமி (C.T.B) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பிறேமநிதி மற்றும் ரஞ்சன் (கனடா), மோகனதாஸ் (சுவீடன்), விஜயதாஸ் (லண்டன்), சற்குணராசா (லண்டன்), செல்வமலர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசேந்திரம், வாணி, சுமதி, வத்சலா, யசோதா, வசீகரன் ஆகியோரின் மாமியாரும், சுதர்சன், நிரோசன், நிலக்ஸன், றொபினா, அனுஷன், அபிவர்சினி, நிதுஷன், துஷானா, விதுஷன், யதுஷன், பிரனுகா, பிரசாத், டிஷாந், ஆகாஷ், ராகவி, ரித்திகா, கமலதர்சி, ஆரனியா, சாருஜன், சாருஹான் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற ஜீவரட்ணம் மற்றும் சிதம்பரநாதன், சுசீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

021 321 1384
0758088137

தகவல்:
குடும்பத்தினர்.

(C-3136)

## பாக்.,அமெ...

உண்மையில் இஸ்லாத்தின் எதிரிகள் எனவும் அவர் கூறியுள்ளார். ஆனால் பின்லேடன் இறந்ததை தமது அமைப்பினால் சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை என அவர் கூறியுள்ளார்.

அவர் உயிர்தியாகம் செய்திருந்தால் அது எமக்கு பெரும் வெற்றியாகும். ஏனெனில் உயிர்தியாகம் செய்வதே எமது அனைவரினதும் இலக்காகும் என அப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஐ.நா. எதிர்ப்புப் பேர...

குறித்து தமது இணையத் தளத்தில் பார்த்துக் கொள்ளுமாறும் அறிவித்திருந்தது.

அத்துடன் பல வீதிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் மேற்கு நாடுகளின் தூதரங்கள் தமது பணியாளர்களிடம் கேட்டிருந்தன.

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கைக்கு எதிராகவே நேற்று முன்தின பேரணிகள் நடத்தப்பட்டதால் இந்த அறிக்கையை வரவேற்ற மேற்கு நாடுகளின் தூதரகங்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று அந்த நாடுகள் அச்சம் கொண்டிருந்தன.

இந்த நாடுகளின் அழுத்தம் காரணமாக அரசு உரிய பாதுகாப்பை ஏற்படுத்தியதால் எந்த வன்முறைகளும் இடம்பெறவில்லை என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அச்சம் காரணமாக நேற்று இலங்கையிலுள்ள ஐ.நா. நிறுவனங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ச-5)

## ஓசாமாவை கொன்...

ஓசாமா பின்லேடன் கொல்லப்பட்டார்.

பின்லேடன் உலகில் எங்கிருந்தாலும் தங்கள் படைகளால் நேரடியாக அழிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க அரசு முன்பு அறிவித்திருந்த கொள்கையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓசாமா பின்லேடனின் மரணம் உலகம் முழுவதும் உள்ள பயங்கரவாத அமைப்புகளுக்கு மிகப்பெரும் பின்னடைவு.

எந்த நாட்டுக்கு எதிராகவும் பயங்கரவாதத் தாக்குதல் நடத்த எங்களது மண்ணைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்பது பாகிஸ்தானின் கொள்கை.

பயங்கரவாதத்தை வேரறுப்பதில் பாகிஸ்தான் அரசியல் தலைமை, நாடாளுமன்றம், மாநில அரசுகள் மற்றும் ஒட்டுமொத்த நாடும் ஒருங்கிணைந்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் உளவு அமைப்புகளுடன் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் ஏற்பாடுகளை பாகிஸ்தான் செய்துள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச நாடுகளின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் தொடரும்.

பாகிஸ்தானுக்கு எதிராக அல் கெய்தா போர் அறிவிப்பு வெளியிட்டிருந்தது. அல் கெய்தா ஆதரவுடன் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான அப்பாவி பாகிஸ்தான் மக்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் மட்டும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அல் கெய்தா மற்றும் அதைச் சார்ந்த பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாகிஸ்தான் படையினர் உயிரிழந்துள்ளனர் என்று அந்தச் செய்திக் குறிப்பில் பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.